12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of the D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 28-1-1979 | இதழ்-19

எந்த வரலாற்றில் ஆதாரம் காட்டுவீர்?

நாட்டின் ஒற்றுமை மொழியால்தான் ஏற்படும் என்று எந்தச் சரித்திரத்தில் எந்த ஆதாரத்தைக்காட்ட முடியும்? சுவிட்சர்லாந்தில் நான்குமொழிகள் ஆட்சிமொழிகளாக இல்லையா? நூற்றுக்கு மூன்று பேர்மட்டுமேபேசும் ஒரு மொழியை அங்கு ஓர் ஆட்சிமொழியாக ஆக்கியிருக்கிறார்களே! தென்னாப்பிரிக்காவிலே இரண்டு மொழிகள் ஆட்சிமொழிகளாக இருக்கின்றனவே-அந்த நாடு பிளவுபட்டா போய்விட்டது? கனடாவிலே இரண்டு மொழிகள் இல்லையா? அங்கெல்லாம் ஒற்றுமை பங்கப்படவில்லை—இங்கு மட்டும் ஏன் இந்தச் சதி?

- பேறிஞர் அண்ணா

(தமிழக சட்டமன்றத்தில் ஆற்றிய உரை 5-9-1960)

இந்தியை எதிர்த்துச் செந்தமிழ் காக்கத் தம் இன்னுயிர் ஈந்த

தியாகச் செம்மல்களுக்கு

நம் வீர வணக்கம்!

★ ★ ★

இந்தித் திணிப்பு தொடரும் வரை
இந்தி எதிர்ப்பும் தொடரும்!
தமிழையும் இந்திய ஆட்சி மொழியாக்கும்வரை
தமிழர்கள் ஓயப் போவதில்லை!

எந்த விலை கொடுத்தேனும் நந்தமிழைக் காப்போம் எனும்

சூளுரையை இந்நாளில் ஏற்போம்

வாழ்க தமிழ்! ★ ஒழிக இந்தி ஆதிக்கம்!

★ பெர்னுண்டசு கடிதத்துக்கு கலைஞர் தந்த பதில் ★

இந்தித் திணிப்புக்கு இதோ சான்றுகள்!

இந்தியைத் திணிக்கும் கொள்கை மத்திய அரசுக்கு இல்லை என்றும், ஜனவரி 26ஆம் நாள் கிளர்ச்சியைக் கைவிட வேண்டும் என்றும் மத்திய தொழிலமைச்சர் ஜார்ஜ் பெர்னுண்டஸ், கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திற்கு, கலைஞர் அனுப்பியுள்ள பதில்:

தாங்கள் 20-1-79-ல் எழுதிய கடிதம் கிடைத்தது; நன்றி.

"தென்னிந்தியாவின் மீதோ வேறு எவர் மீதோ இந்தி திணிக்கப்பட மாட்டாது" என்று நீங்கள் மீண்டும் கூறியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. அதேசமயத்தில் பிரதம மந்திரி மீண்டும் மீண்டும் உறுதிமொழிகள் கொடுத்திருந்தும்கூட எல்லாத்துறைகளிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தி திணிக்கப்பட்டே வருகிறது.

நெருக்கடிநிலை காலத்தில் ஆட்சி மொழிப் பிரச்சினைக்காக ஒரு தனி இலாகாவே செயலாளர் ஒருவரின்கீழ் ஏற்படுத்தப்பட்டது. 60-க்கு மேற்பட்டவர்கள் இந்த இலாகாவில் பணி புரிகின்றனர். இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இந்தியைத் திணிப்பதில் இந்த இலாகா முனைந்து செயல்பட்டு வருகிறது.

14 பாங்குகளும் தேசியமயம் ஆக்கப்பட்டபோது அதற்கு நாங்களும் ஆதரவு அளித்தோம் என்பது நீங்கள் அறிந்ததே. ஆனால் தேசியமயம் ஆக்கப்பட்ட அந்த பாங்குகள் இந்தியைப் பரப்புகின்ற — இந்தியைத் திணிக்கின்ற அமைப்புகளாகச் செயல்பட்டு வருகின்றன.

நிதித்துறை அமைச்சகங்கள் கூட இந்தியைத் திணிக்கும் கருவிகளாக செயல்படுகின்றன என்பது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. உதாரணமாக நிதி அமைச்சகத்தின் செலவுத் துறையிலுள்ள 6 பிரிவுகள் தங்கள் அலுவல்களை இந்தியில் மட்டுமே நடத்தி வருகின்றன. 'பொதுத்துறை நிறுவனங்களில்கூட 45 பைல்கள் இந்தியில் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளன. இருமொழித் திட்டம் கைவிடப்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது.

"இந்தி பேசாத பகுதிகளைச் சேர்ந்த அரசுத் துணைச் செயலாளர்களும் அதற்கு மேலான பதவி வகிப்பவர்களும இந்தியைப் படிக்க வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிருர்கள். இந்தி மொழியில் அலுவலை நடத்த அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிருர்கள் இந்தி மொழியில் அலுவலை நடத்த அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றும் பதவி உயர்வுக்கு மொழி அறிந்திருக்க வேண்டும் என்றும் அந்த அதிகாரிகளுக்குக் கூறப்பட்டுள்ளது" என்று தமிழக நிதியமைச்சர் சொல்லியிருக்கிருர்.

"வற்புறுத்தல் என்ற கேள்விக்கே இடமில்லை. அந்த அதிகாரிகளின் நலனுக்காக, குறிப்பாக இந்தி மொழி பயன்படுத்தப்படுவது அதிகரித்து வருவதன் காரணமாக அவர்கள் இந்தி மொழி அறிந்து கொள்ள வேண்டும் இதனல் இந்தி வகுப்புகளுக்கு அவர்கள் செல்ல வேண்டும் என்பதும், இந்திப பரீட்சையை அவர்கள் எழுத வேண்டும் என்பதும் 1976 பிப்ரவரியிலிருந்து கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது' என்றுதமிழக நிதியமைச்சருக்கு 29-5-78-ல் எழுதியுள்ள தமது கடிதத்தில் பிரதமர் குறிப்பிட்டிருக்கிருர்.

இது வற்புறுத்தல் இல்லையா?" 'தென்னுட்டில் யார் மீதும் இந்தித் திணிப்பு கிடையாது' என்ற கொள்கைக்கு இது எதிராக இல்லையா?

அரசியல் சட்டத்தின் 8-வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மொழிகளில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளை நமது இளைஞர்கள் எழுதலாம் என்று நமது அரசு உத்தரவு போட்டிருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையே தருகிறது.

ஆனல் கேள்வித் தாள்கள் இந்தி அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும். இதுவரை ஆங்கிலத்தில் மட்டுமே கேள்வித் தாள்கள் இருந்தன. ஆனல் இந்த ஆண்டு, இந்திக்கு மட்டும் தனித் தகுதி தரப்பட்டிருக்கிறது. மற்ற மொழிகளுக்குத் தரப்படவில்லை.

இப்போது, முக்கியமான கேள்வி இதுதான்; பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் நியமனம் பெற்றவர்கள் எந்த மொழியில் பணிபுரிவார்கள்.

பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் தங்கள் தாய் மொழியில் எழுதித் தேர்வு பெறும் மாணவர்கள், தங்கள் அலுவலில் இந்தியை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று நேரடியாகவோ, மறைமுகமாகவோ வற்புறுத்தப்படக்கூடும் என்று நான் அஞ்சுகிறேன். ஏனென்ருல் டெல்லியிலுள்ள மத்திய அரசுச் செயலகத்தில், தற்போது இந்தி அல்லவா மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அரசின் அறிவிக்கப்பட்ட கொள்கை மாறுபட்டதாக இருந்தபோதிலும், அரசினல் இந்தி எவ்வாறு திணிக்கப்படுகிறது என்பது குறித்து எல்லா விவரங்களையும் இந்தக் கடிதத்தில் சொல்ல முடியாத நிலைக்கு வருந்துகிறேன்.

இந்த இந்தித் திணிப்பினல்தான். 1979 ஜனவரி 26-ந் தேதியன்று எங்கள் எதிர்ப்பை அமைதியான முறையில் காட்ட எங்கள் கட்சி தீர்மானித்திருக்கிறது. அந்த நாளில் கறுப்புச் சட்டை அணியவும், கறுப்புக் கொடிகளை ஏற்றவும் நாங்கள் முடிவு செய்திருக்கிருேம். கறுப்புக்கொடி ஊர்வலம் நடத்தவும் தீர்மானித்திருக்கிருேம்.

'மத்திய அரசின் ஆட்சி மொழிகளாக மாநில மொழிகள் அனைத்தையும் ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தும் தீர்மானம். ஊர்வலத்தின் இறுதியில் படிக்கப்படும். எவ்வளவு குறைகள், தவறுகள் இருந்தபோதிலும் நமது குடியரசை வலுப்படுத்த வேண்டும் என்று நீங்கள் கூறுவதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதனல்தான் நமது குடியரசைக் காப்பதற்காகவும் ஜனநாயகத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்காகவும் சரித்திரப்புகழ் வாய்ந்த போர்க்களத்தில் நாம் ஒன்ருகப் போராடினேம். எனவே எங்களுடைய கண்டன ஊர்வலங்களினல் நமது குடியரசு தினத்தின் மாட்சி குறைந்துவிடாது என்று நம்புகிறேன்.

மேற்கு வங்காளத்தின் முதல்வராக டாக்டர் பி. சி. ராய் இருந்தபோது. அசாமிலிருந்த வங்காளிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் கண்டிக்கும் வகையில் 1960-ம் ஆண்டு குடியரசு தினத்தை துக்க நாளாக அவர் அறிவித்தது உங்களுக்கு நினைவிருக்கும். குடியரசு நாளை கோலாகலமாகக் கொண்டாட, கவர்னர் முடிவு செய்தபோது, ராஜ்பவனுக்கு மின்சப்ளையைத் துண்டிக்கவும் ராய் முடிவு செய்தார்.

என் மனஉறுதியை நீங்கள் அறிவீர்கள். இந்தித் திணிப்புக்குறித்து நாங்கள் மிகவும் வருந்துகிருேம் அதனல்தான் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். எங்கள் வருத்தத்தையும் எதிர்ப்பையும் காட்ட இதைவிட வேறு என்ன வழி இருக்கிறது?

அதனல்தான். உங்கள் கோரிக்கையை ஏற்கவில்லை. இதற்காக என்னைத் தவருகப் புரிந்துகொள்ளக்கூடாதுஎன்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும், 1978 டிசம்பரிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுவிட்டது. மத்திய அரசின் இந்தித்திணிப்பைக்கண்டித்துத் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கிறது அல்லவா? இதற்கு மாநில ஜனதா தலைவரும் ஆதரவு தந்திருக்கிருர் என்பதை இந்தச் சமயத்தில் உங்கள்கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த முடிவு 23-1-1979 அன்று நடைபெற்ற சர்வகட்சி தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பரந்த அறிவும் முற்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

கூட்டாட்சி இல்லா நாட்டாட்சி?

★ நந்திவர்மன் ★

ஆட்கள் மாறினாலும் ஆளும் முறையிலே மாற்றமில்லை. எதிரே அமர்ந்திருந்தோர் இடம் மாறி அமர்ந்துள்ளனரே அன்றி எதிர்த்தாக வேண்டிய இலக்குகள் அன்றும் இன்றும் ஒன்றாகவே இருக்கின்றன. கூடுதல் அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளதால் ஏற்படும் கேடுகள் ஓய்ந்தபாடில்லை. அதிகாரக் குவிப்பால் பாதிக்கப்பட்டோர்கூட ஆளும்வாய்ப்பைப்பெற்றுள்ளதால் அதிகாரக் குவிப்பின்பால் வெறுப்பை விலக்கி விருப்பை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

ஆட்சியில் இருந்தாலும் சரி — ஆட்சி பீடத்தை விட்டு அகன்றாலும் சரி அன்றும் இன்றும் தி. மு. கழகம் மட்டுமே அதிகாரக் குவிப்பைத் தகர்த்தெறியக்குரல் கொடுத்து வருகின்றது. தி. மு. கழகம் ஆளுகின்ற காரணத்தால் — அந்தக் காலத்தில் தந்திடலாகாது தன்னாட்சி என்ற சந்தர்ப்பவாதிகளின் வாதத்தை நாடும் நல்லோரும் மறந்திடவில்லை, மத்தியில் குவிந்துள்ள அதிகாரத்தை பரவலாக்க-மாநில சுயாட்சிபெற இராணுவத்தையே சந்திப்பேன் என்று மேடையில் நடித்தவர்கள் மாநில சுயாட்சி தம் கொள்கையே அல்ல என்று சரணகதிச் சிந்து பாடியதையும் நாடு மறந்திடவில்லை. புரியும்படி பேசுவதைப்பெரும் பிழையெனக் கொண்டு புரியாமல் — புரிந்து கொள்ளாமல் உளறுவதையே புரட்சியென்று கொள்ளும் போலிகள் மக்கள் சுயாட்சியே கொள்கை என்று கூக்குரல் கொடுத்தார்கள். ஏதோ பிறரெல்லாம் மிருகங்களுக்காக சுயாட்சி கேட்பதைப் போலவும் இவர்கள் மட்டுமே மக்களுக்காக சுயாட்சி கேட்பதாகவும் கருதிக்கொண்டு உளறியவர்கள் நேற்றைக்கொரு கொள்கை இன்றைக்கொரு கொள்கை நாளைக்கொரு கொள்கையென்று இடம் மாறி இருப்பதாலேயே தம் திரைப்படம் ஓடாதிற்கு நேற்று — இன்று — நாளை என்று தலைப்பிட்டனரோ என எண்ணத்தோன்றுகின்றது.

தென்னக மண்ணில் தி. மு. கழகம் எழுப்பிடும் இக்குரல் காலத்தின் தேவையாகி வருகின்றது. 'மக்களாட்சி' முறையிலே மக்கள் மெள்ள மெள்ள நம்பிக்கை இழந்து வரும் காலம் இது என்று எழுதுகின்றார் அறிஞர் F. A. ஹெய்க். ஒருகாலத்தில் உள்ள எழுச்சியை உருவாக்கக் கூடிய ஒப்பற்ற கொள்கையாக இருந்த மக்களாட்சி இன்று சிந்தனையாளர்களிடையே முன்பு பெற்றிருந்த உயரிடத்தை இழந்து வருகின்றது.

மக்களாட்சிக் கோட்பாடு பல்வேறு துறைகளில் பரவலாக்கப்பட்டதன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இந்த அறிஞர் எழுதியுள்ளார். மக்களாட்சி முறையின் தோல்வியால் அல்ல இன்று மக்களிடையே மக்களாட்சியின் பால் எற்பட்டுள்ள அவநம்பிக்கை. மக்களாட்சி முறையை தவறான முறையில் செயல்படுத்தியதால்தான்இச் சீர்கேடு நேர்ந்துள்ளது என்று அவர் விளக்குகிறார்.

நல்லது செய்ய இயலாதவர்கள் நாடாள வந்துவிட்டால் அல்லது செய்யவே ஆட்சிக் கோலைப் பயன்படுத்துவர் என்பதைஅனுபவரீதியாகவே இப்போதைய ஆட்சியின் கீழ் அறிந்த நமக்கு இக்கேடு கிளைப்பதால் நாட்டில் ஏற்படக் கூடிய வேதனைக்குவிளக்கம் தெளிவாகவே தெரிகின்றது.

பெரும்பான்மை பலம் பெற்றுவிட்டதாலேயே பாராளுமன்றில் அதிகாரம் செலுத்துவோர் சிறுபான்மையினரின் மொழி இன நலன்களை முற்றிலும் சிதைக்கும் சட்டங்களை இயற்ற முடிகிற போது மக்களாட்சிமுறையின்பால் வெறுப்புதோன்றுவதில் வியப்பிருக்க முடியாதல்லவா,

சுதந்திரமான அரசமைப்புச் சட்டம் தனி மனிதனின் சுதந்திரங்களை வழங்கிப் பாதுகாக்கும் கேடயமாக இன்று இல்லை.

விரும்பிய வழியில்எல்லாம் பெரும்பான்மையினர் செயல்பட — தம் விருப்பத்தைசெயல்படுத்த வழங்கப்பட்டுள்ள உரிமமாகவே அரசமைப்புச் சட்டம் இருந்து வருகின்றது.

அதிகாரக் குவிப்பால் மத்தியில் இருந்து மாநி யங்களை ஆண்ட ஆளவந்தார்கள் எப்படியெப்படி ல்லாம் மாநிலங்களின் உரிமைகளை மண்மேடாக்கி மகிழ்ந்தார்கள் என்பதை வாஷிங்டன் பல்கலைக் கழகப்பேராசிரியர்பால் K. பிராங்என்பார்தம் ஆய்வுக் கட்டுரை ஒன்றில் அழகுறத் தெரிவிக்கின்றார்.

காங்கிரசல்லாத அரசுகளை கவிழ்க்க — கையூட்டு — கரவு — கனிவு — மிரட்டல் — உருட்டல் — அரவணைப்பு — ஆளிழுப்பு என்றெல்லாம் அரசியல் வாதியரை இழுத்து ஆட்சிகளைக் கவிழ்த்தனரீ என அவர்எழுதுகின்றார். கட்சிகளை உடைத்தனர் என்று அப்பேராசிரியரின் கட்டுரையில் காங்கிரஸ் ஆட்சி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் ஆகிடும் நிலை வலுவான மத்திய அரசு வைத்தது தான் சட்டம் என்ற கதை — தலையாட்டும் தஞ்சாவூர்ப் பொம்மைகளை — கைப்பாவைகளை மாநிலங்களில் முதலமைச்சராகத் திணிக்கும் மமதைப் போக்கு தனித்தன்மை பெற்றோரை தகர்த்தெறியும் புது சூழ்ச்சிகள் — இதனால் மாநில அரசுகளின் வீழ்ச்சிகள் காலங்காலமாக நடந்து வரும் இந்தக் கதை அதிகாரக் குவிப்புப் பெற்றெடுத்த ஆணவக் குழந்தையன்றோ! நாட்டாட்சி காட்டாட்சியாகிட்ட கதையன்றோ

திராவிட முன்னேற்றக் கழகத்தை உடைக்கத் திட்டப்பட்ட சதி வரலாற்று ஏடுகளில் இடம் பெறத் தக்கது. திருப்பதியில் காங்கிரசின் மூத்த தலைவர்கள் கூடி சிண்டிகேட் எனும் அணியை உருவாக்கி காங்கிரசைப் பிளவு படுத்திய கதையைச்சுவைபட ஒரு நூலாக குல்தீப் நய்யார் எழுதியதைப் போல் தி. மு. கழகத்தை உடைக்க மத்தியப் பேரரசு தீட்டிய சதியையும் சுவையான வரலாறாகவே எழுத முடியும்.

எவ்வளவு நல்லவரையும் இறுமாப்புக் கொள்ள வைக்கும் அளவு மத்தியிலே அதிகாரம் குவிக்கப்பட்டுள்ளது என்பதற்கு நடைமுறை எடுத்துக் காட்டு

தென்னக மண்ணில் தி,மு, கழகத்தின் ஆணிவேரைப் பிடுங்கினால்தான் இந்திக் கட்சிகள் காலூன்ற முடியும். இன வெழுச்சியைத் தகர்த்தெறிய முடியும் இதற்ககேவே நிரபராதிகள் தொடர்ந்து நிந்தனைக் குள்ளாகின்றார்கள்.

மத்தியில் குவிக்கப்பட்ட அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டாலொழிய இத்தகு ஓரவஞ்சனைப் போக்கிற்குமுடிவே இல்லை.

மாநில முதல்வர்கள் மத்திய அரசின் விருப்பு வெறுப்பிற்கேற்ப ஆட்டுவிக்கப்படும் கைப்பொம்மைகளாக இருந்து வரும் காட்சியை நாடு கண்டு வருகின்றது. கண்துடைப்பு அம்சங்களாலேயே மாநில உரிமைகளை அரசமைப்புச் சட்டம் பறித்துக்கொண்டிருப்பதைக் காலங் காலமாக மூடி மறைத்திட இயலாது.

குடியாட்சி என்பது ஒரே கொடி ஆட்சி என்ற குறுகிய மனம் படைத்தோர் அன்றும் இன்றும் கோலோச்சுகின்றனர்

நாட்டுக் கொடியைப் போல் கட்சிக் கொடியை வைத்துக் கொண்டு நாடே ஒரு கட்சியின் உடமை என்பது போல் நடந்தவர்கள் இன்று பதவியில் இல்லை. ஆட்சிக்கு வந்த அறிவாளர்களாவது கட்சிக் கொடிகள் நாட்டுக் கொடி போல் இருத்தல் கூடாது என்று சட்டமியற்றித் தடுத்தார்களா என்றால் இல்லை!

கூட்டாட்சி என்றால் கூட்டாக தேர்தலில் கூட நின்று கொடுமைக் கெதிராகக் குரல் கொடுத்தவர்களைக் குற்றவாளிக் கூண்டிலேற்றி குடம் குடமாகத்தூற்றல் சேற்றை வாரி இறைக்க மத்தியில் ஆள்வோர்க்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்பாகக் கருதுகின்றனர்.

மக்களின் வாக்குச் சீட்டால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற இரண்டு அரசுகளில் ஒன்று மட்டும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாததாக — ஓங்குயர்ந்த அதிகாரங்கள் ஒட்டு மொத்தமாக குவிக்கப்பட்டதாக இருந்திடுதல் அறிவுடமை அல்ல என்ற எண்ணம் இந்தியத் துணைக் கண்டம் எங்கும் ஏற்பட்டுள்ளது.

இந்த எண்ணம் பரவவளர இந்தியத் துணைக் கண்டத்தில் மாநில சுயாட்சி மலர தி. மு. கழகம் ஆற்றி வரும் பணி காலத்தால் அனைவராலும் ஏற்றிப் போற்றக் கூடியதாக இலங்கிடும்.

இருபத்தாறு!

புலவர் த. தோழப்பன்

இந்தி மொழி ஆதிக்க வெறியின் பாதை,
இந்நாட்டிற் கொவ்வாது, பெரிய நாடு
எந்தவொரு மொழியாலும் சிறிய நாடு
என்ற நிலை கூடாது எடுத்துக் கூற,
வந்திடுவீர் பறை சாற்றி! என்றார். எங்கும்
வரிப்புலிக்க முகமறவர் முரசத் தோடு,
வந்ததனால் பெரு நகரம் திருச்சி அன்று
வடிவத்தில் சிறிதென்றால் வியப்பு முண்டோ!

அணி தேர்ப்பு ரவிகளிறு மறவர் கூட்டம்,
அணி வகுத்த நாற்படையின் ஒலிமு ழக்கம்!
அணி தருசீர் வார் முரசம் இடிமு ழக்கம்
அதிர்ந்திடவே! மழைபொழிய கலைஞர் தானைப்
பணி முடிக்கப் படை வரிசை சென்ற பாங்கு
பண்டைய நாள் மூவேந்தர் பகைமு டிக்க
அணிவகுத்துச் சென்றபுற நானூ றாகும்,
அகிலத்துள் தமிழுணர்வை எடுத்துக் கூறும்.
விரித்தகை நல் ரல்களினால் சின்னம் காட்டி,

வெற்றி நகை முக முறுவல் எழிலைக் கூட்டி,
எரிமலையைப் பனிமலையாய் எண்ணும் மக்கள்
இதயத்துள் வாழ்தலைவர் தமிழர் தலைவர்
கருணா நிதிச் சோழன் வந்த காட்சி.
கண்டார்க்குப் புதிய புற நா னூறாகும்!
உருவான படையுணர்வை மறுப்ப ராயின்,
உண்டாகும் எப்பகையும் தூள்தூ ளாகும்.

தந்தை பெரி யார் அறிஞர் அண்ணா போன்றார்
தமிழ்த் தென்றல் திரு. வி. க. அடிக ளாரும்,
இந்திமொழி ஆதிக்க வெறியி னாலே,
இறந் தொழிந்த தியாகிகளும் நாற்ப தாண்டு,
இந்தி மொழிப் பனிகயொழியப் பாடு பட்டும்,
இருக்கின்றோம் 'ஒழியாது'' என்றே, வானம்
தந்தபெரும் தண்டனையே! இரண்டு நாட்கள்
தமிழுணர்வுங் கறைகூவல் விட்ட நாட்கள்,

செம்புலத்துப் பெயல் நீரால், போர்க்க ளத்தைக்
சிந்திக்கும் செங்குருதிக் காட்சி! நீண்ட
கொம் பொடிந்த களிறன்ன குடைகள், காயம்
கொழு நன் பின் மகன் செல்ல மார்பில், கண்ட
நம்மினத்துப் பெண் குலத்தார் இன்மு கம்போல்,
நடைபெற்ற மாநாட்டில் பெண்கள் கண்ட,
நம் தலைவர் அசோகன் தன் மனத்தைப் பெற்றே.
நமக்களித்த அறவழிதான் இருபத் தாறே!

சரித்திரச் சின்னங்களே!

:-கவிஞர் மணிமொழி :

இந்தியை எதிர்த்துச் செந்தமிழ் காத்திட
இன்னுயிர் தந்தவரே — எங்கள்
சந்ததி வாழ்ந்திட சந்தனமாகிய
சரித்திரச் சின்னங்களே!
— வாழ்த்தி வணங்குகிறோம் — தலை
தாழ்த்தி வணங்குகிறோம்...(இந்தியை)
ஒப்பரும் மொழியாம் ஒண்டமிழ்த் தாய்க்கொரு
ஊறு விளைந்திடவோ — நம்
முப்பெரும் வேந்தரும் காத்து வளர்த்தனர்
கேடு விளைந்திடவோ
— எண்ணி எதிர்த்தவரே — படை
தன்னில் இணைந்தவரே...(இந்தியை)
தன்மானத் தாளமுத்து தமிழ்வீர நடராசன்
தாள்வழி நடந்தவரே — இந்த
மண்மானம் காத்திடப் பொன்வானமாகிய
மாணிக்க வீரர்களே
— புகழினைப் பாடுகிறோம் — தமிழ்ப்
பகையினைத் தேடுகிறோம்...(இந்தியை)

ஈரானில் கொந்தளிப்பு!

இறுதி வெற்றி யாருக்கு?

"நாய்களைப்போல் குரைக்கும் இந்த மக்களால் என்னை என்ன செய்துவிட முடியும்?" என்று இறுமாப்போடுகேட்ட ஈரான் மன்னரான ஷா இன்று அந்த மக்களின் கனல் மிகு போராட்டத்தின் வெப்பத்தைத் தாளமுடியாது ஈரானிலிருந்து பிடித்த ஓட்டத்தை எகிப்தில்போய் நிறுத்தியிருக்கிருர். எகிப்திலிருக்கும் அசுவான் நகரின் ஒரு 'சொகுசு' ஹோட்டலில் தங்கி தன்னை 'ஆசுவாசப்படுத்தி'க் கொண்டிருக்கும் மன்னர் ஷா, தனக்கு மருத்துவம் பார்த்துக் கொள்ளவே ஈரானிலிருந்து வந்ததாக இன்னும் கூறிக் கொண்டிருக்கிருர் —

உலகத்தின் கவனம் முழுவதையும் இன்று தன் பக்கம் ஈர்த்துக் கொண்டிருக்கும் ஈரான், எண்ணெய் வளம் கொழிக்கும் செல்வம் கொழுத்த நாடு! எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் ஏராளமான செல்வங்களை 'அறுவடை' செய்வதில் முதலிடம் வகிப்பதுசவுதிஅரேபியா-இரண்டாவது இடம் ஈரானுக்கே!

1941-ஆம் ஆண்டு ஈரான் நாட்டு மன்னராக முடிசூட்டிக்கொண்டார் ஷா. 1951-ம் ஆண்டு நடந்த ஒரு புரட்சியின் வேகத்தைக் கண்டு பயந்தோடிய அவர் வெளிநாட்டில் அடைக்கலம் புகுந்தார். அமெரிக்க இராணுவத்தின் ஒத்துழைப்போடு அந்தப் புரட்சி ஒடுக்கப்பட்ட பிறகு மீண்டும் அரியணையில் அமர்ந்தார் — 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்பது போல்,எப்படியோ அப்போது 'பிழைத்'துக்கொண்டார்.

இப்போது எழுந்துள்ளமக்கள் புரட்சியில் இரண்டாவது முறையாகவும் அவரது மன்னராட்சி 'பிழை'த்துக் கொள்ளுமா என்பது சந்தேகமே!

ஈரானை இதற்கு முன் ஆண்ட மன்னர்களுக்கு ஏற்பட்டிருக்காத, எதிர்ப்பு இன்றைய மன்னரான ஷாவுக்கு மட்டும் ஏற்படக் காரணங்கள் யாவை?

ஒன்று—

மேற்கத்திய கலை கலாச்சாரம், பண்பாட்டை ஈரான் மக்கள் மீது அவர் திணிக்கப் பார்த்தார். மக்களின் வாழ்க்கையை 'நவீன'ப் படுத்துகிறேன் என்று சொல்லிக் கொண்டு!

இசுலாமிய நாகரிகம் ஏற்றுக் கொள்ளாத — வெறுத்தொதுக்கும் குடி, சூதாட்டம் விபச்சாரம்— நச்சுக் காளான்களைப்போல் அன்றாட வாழ்க்கை மீது படர ஆரம்பித்தன.

'பகலில் தூங்கி இரவில் விழிக்கும்' முதலாளித்துவ பாணி வாழ்க்கையைச் சீரணிக்க முடியாமல் அந்த முஸ்லீம் மக்கள் திணறிக்கொண்டிருக்கையில் —

மன்னர் ஷாவோ, நவீன நாகரிகம் என்ற பெயரால் அருவருப்பான செய்கைகளில் ஈடுபட்டு, வக்கிரமான சுகம் காணும் மேலைநாடுகளில்உலா வந்து, உயர்தர மதுபானங்களில் தன்னைத்தானே மிதக்க விட்டுக் கொண்டார்; இன்றொரு எழில்மங்கையை மணந்து நாளையே அவளை விரட்டிவிட்டு, மறுநாள் மற்றொரு கவர்ச்சி ராணியைக் கண்டு மோகித்து அவள் கரம் பற்றி, அடுத்தநாளே அவளும் சலித்துப்போய், உடனேயே இன்னொரு 'சிட்டு'க்கு வலை வீசும் மன்னர்களுக்கே உரிய விளையாட்டில் ஷா ஆர்வம் காட்டி வந்தார். மண ஒப்பந்தங்களும் இரத்துக்களும் அவருடைய அன்றாட வேடிக்கை விவகாரங்கள் ஆயின.

மன்னனின் இந்த அடாத போக்குக் கண்டு மக்கள் தங்களுக்குள்ளேயே கொதித்துக் கொண்டிருந்தனர்.

இரண்டாவது காரணம்— ஷாவின் புதிய பொருளாதாரக் கொள்கையும்,இராணுவத்தை 'நவீன'ப்படுத்தும் திட்டமும் ஆகும்!

புதிய பொருளாதார திட்டத்தால் அந்நியநாட்டு முதலாளிகள் ஈரானைச் சுரண்டிக் கொழுத்தனர்; உள்நாட்டு மக்களோ இதுவரை காணாத வறுமையிலும், பற்றுக்குறையிலும் சிக்கித் தவித்தனர்— இத்தனைக்கும் ஆண்டுக்கு ஆண்டு நாட்டு வருமானம் உயர்ந்துகொண்டுதான் இருந்தது. குறிப்பாக 1973-ஆம் ஆண்டு உலகம் முழுக்க எண்ணெய்ப் பற்றுக்குறை ஏற்பட்டபோது, ஏற்றுமதியின் மூலம் ஈரான் ஈட்டிய வருமானம் கொஞ்ச நஞ்சமல்ல!

இராணுவத்தை நவீனப் படுத்துகிறேன் என்று சொல்லிக்கொண்டு, வருமானத்தின் பெரும்பகுதியை நவீனபோர்க் கருவிகளை வாங்குவதில் செலவழித்ததால் பற்றுக்குறை இன்னும் அதிகரித்தது. நவீனமயமாக்கப்பட்ட இராணுவம் பகை நாட்டோடு பொருதுவதில் தன் திறனைக் காட்டவில்லை. உள்நாட்டு மக்களை ஒடுக்குவதில்தான் அவ்வல்லமையோடு செயல்பட்டது.

மன்னர் என்ற பெயர்சூடி மக்களைக் கொள்ளையடிக்கும் தனிநபர் ஆதிக்கத்திலிருந்து ஈரானை மீட்க அவ்வப்போது புரட்சிகள் தோன்றின; அவை ஈவிரக்கமில்லாமல் ஒடுக்கப்பட்டன! கடந்த ஆண்டு (1978) துவக்கத்தில் தோன்றிய இப்புரட்சியை ஒருமுழுப் புரட்சி என்றே சொல்லலாம்! இதன் முன்னால் ஷா நெடுநாள் தாக்குப்பிடிக்க இயலாது.

மன்னராட்சியை ஒழித்துக் கட்டி மக்களாட்சியை நிலை நாட்டுதல் — மேலை நாடுகளிலிருந்து 'இறக்குமதி' செய்யப்படும் 'கலை'களாலும், வாழ்க்கை முறைகளாலும் உள்நாட்டு கலை, நாகரிகம், பண்பாடு - கறைபடியாது பாதுகாத்து இசுலாமிய சட்டத்திற்குகந்த ஆட்சி முறையை நிறுவுதல்—போன்ற இலட்சியங்கள் இறுதி வெற்றி அடையும் வரை ஓயப்போவதில்லை

என ஈரான் மக்கள் சூளுரைத்து விட்டனர்.

நாட்டை விட்டு ஓட்டம் பிடித்த ஷா ஈரானில் ஒரு 'பொம்மை' அமைச்சரவையை உருவாக்கியுள்ளார், அமைச்சரவையின் தலைமைப் பொறுப்பு ஏற்றிருப்பவர்— ஷாபூர் பக்தியார்

ஒரு பொம்மை அமைச்சரவையை உருவாக்கி விட்டு பின்னின்று அதைத் தானே முடுக்கி விடலாம் என்ற ஷாவின் கணக்கு தப்பாகி விட்டது ஷாபூர் பக்தியாரின் அமைச்சரவையும் இப்போது ஆட்டங் கண்டு போய்தான் இருக்கிறது.

இதற்கிடையில்—

பாரீசில் இருந்துகொண்டே புரட்சித் திட்டங்களைத் தயாரித்து மக்களை போராடச் செய்து வரும் 'அயதுல்லா கொமேனி'க்கு அழைப்பு விடுத்துள்ளார்ஷாபூர்- பேச்சு நடத்தி உடன்பாடு காண'

புரட்சியைத் தூண்டி விட்டதற்காக 1964—ஆம் ஆண்டில் ஈரானிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் அயதுல்லா கொமேனி.

நாடு கடத்தப்பட்டபின் துருக்கியில் சில ஆண்டுகள் வாழ்ந்த அவர், பிறகு இராக் நாட்டிற்குச் சென்ருர். பதின் மூன்ருண்டுகள் அங்குவாழ்ந்து வந்த அவரை 1978—ஆம் ஆண்டு இராக் அரசு தன் நாட்டிலிருந்து வெளியேற்றி விட்டது. அங்கிருந்து அவர் பாரீஸ் சென்று அங்கேயே தங்கி விட்டார்.

தன் கோரிக்கைகளுக்கு இணங்கி 'ஷா' குழுவிலிருந்து விலகினுல் ஷாபூர் உடன் பேச ஈரான் வருவதாக கொமேனி நிபந்தனை விதித்துள்ளார். இவ்விருவரும் மனம் விட்டுப் பேசினுல் ஒரு நல்ல உடன்பாடு தோன்றும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஆனல்—

இராணுவத்தின் உயர் பொறுப்புகளில் இருக்கும் ஷா ஆதரவாளர்கள், இதே நேரத்தில் ஒரு 'இராணுவ அரசை ஈரானில் உருவாக்கும் அபாயமும் உள்ளது.

அந்தக் கட்டம் தோன்றுமானுல் — இராணுவ அரசை ஏற்படுத்த அமெரிக்கா முழுமூச்சோடு செயல்படும் என சோவியத் தெரிவித்துள்ளது. காரணம், அமெரிக்காவின் கைஓங்கியிருக்கும் 'சென்டோ' என்ற இராணுவக்கூட்டமைப்பில் ஈரானும் அங்கம் வகித்து வருகிறது.

ஈரான் விவகாரத்தில்அமெரிக்கா தனிக்கவனமும், அக்கறையும் செலுத்துகிறது என்ருல் காரணம் இல்லாமலில்லை ஈரானிலிருந்து தான் பெறும் எண்ணெய்க்கு மிகமிகக் குறைந்த விலையே கொடுக்கிறது அமெரிக்கா ஈரானில் மக்கள் அரசு ஏற்படுமானுல் அதனுடைய பேராசைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்படுமல்லவா?

மாணவர்களின் கையிலிருந்த புரட்சி மக்களின் கரங்களுக்கு மாறிவிட்டது ஆயிரக்கணக்கான மக்கள் மன்னராட்சியை ஒழித்து மக்களாட்சியை நிறுவத் தங்கள் இன்னுயிரை ஈந்துவிட்டார்கள். இன்னுமாயிரம் ஆயிரம் மக்கள் தங்கள் இன்னுயிரை இழக்கச் சித்தமாக இருக்கிருர்கள்.

ஈரானில் இன்றில்லாவிட்டால்நாளை, நாளை இல்லாவிட்டால் மறுநாள் — ஆக என்ருவது ஒருநாள் மக்கள் ஆட்சி மலரப்போவது திண்ணம்.

மக்களின் புரட்சி தோல்வியைத் தழுவியதாக சரித்திரத்தின் எந்தப் பக்கமும் சொன்னதில்லை!

சாலு

விழித்தெழடா ★ ★ தமிழா நீ ...!

விழித்தெழடா தமிழா நீ
உறங்கியது போதாதோ!
பழித்திடுவோர் சதியை நீ
பிளந்திடுதல் வேண்டாமோ!
வழித்தடத்தில் பாம்பிருந்தால்
வாளாய் நீ இருப்பாயோ!
ஒழித்திடுவோம் தமிழ்ப்பகையென்
றுன்குரலை உயர்த்தாயோ!
ஒப்பனைக்கு நீமயங்கி
உன்னினத்தை அழிப்பதெலாம்
தப்பிலையோ நீயிதனை
உணர்ந்திலையோஎழுந்திடடா!
ஒப்பரிய தமிழன் நான்
உரித்திடுவேன் பொய்மைகளைச்
செப்பிடுவோர் ஒப்பனையை
எனச்சினந்து சிலிர்த்திடடா!

'தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
அமைவாக வரவேண்டும்'
அன்றுரைத்தார் பாவேந்தர்!
இமைமூடி னார் அன்னார்
ஆனாலும் அவர்விருப்பம்
தமிழா நாம் தீர்த்திடுதல்
தலையாய நம்கடமை!
பொறுமையுடன் உழைத்திட்டார்
பொன்னுலகம் காணுதற்கே!
வறுமைதான் மிச்சமடா
வாழ்தொழிலா ளர்களுக்கு!
சிறுமைமிகு இந்தநிலை
மாறுதற்கும் உள்ளத்தின்
வெறுமைநிலை நீங்குதற்கும்
விழித்தெழடா தமிழா நீ!

-:ஏ. தமிழொளி-:

உளறல்...

'இம்மாதிரி விழாக்களில் அரசியல் பேசக்கூடாது என்பது மரபு. தெரிந்தோ தெரியாமலோ வள்ளுவர் அரசியல் பற்றிக்கூறி இருக்கிறார். நானும் சிலவற்றை இங்கேகூறவிரும்புகிறேன்

தமிழைக் காப்போம் என்றால் இன்னொரு மொழியைத் தாக்குவோம் என்று பொருள் அல்ல''

— எம். ஜி ஆர்.

திருவள்ளுவர் நாள்
வள்ளுவர் கோட்டம்
'அலைஓசை 16-1 79

தர்க்கக்கலையின் (லாஜிக்) முன்பு இந்த வாக்கியங்களின் ஆயுள் எவ்வளவு "அற்பாயுளாக" இருக்கின்றன என்பதே கட்டுரையின் நோக்கம்.

"இம்மாதிரி விழாக்களில் அரசியல் பேசக்கூடாது என்பது மரபு''

இது எம் ஜி ஆரின் வாக்கியம்.

திருமண வீட்டிலும், சாவு வீட்டிலும். ஈரோட்டில் அரசுச் செலவில் நடந்த பெரியார் நூற்றாண்டு விழாவிலும் "அரசியல்'' பேசிய "மரபு மன்னர்கள்'' வள்ளுவர்விழாவில மட்டும். மரபுக்கு இலக்கணம் கற்பிப்பது தர்க்க ரீதியாக "சூடோ பிரபோசல்'' ஆகும்

பல ஆண்டுகட்கு முன்பு சென்னைத் துறைமுகப் பகுதியில் நடந்த வள்ளுவர்மாநாட்டில் 'அரசியல்' பேசப்பட்டது.

—அப்போது எம். ஜி. ஆர்-யாருமறியாத ஒரு துணை நடிகராக இருந்த நேரம்.

ஆகவே மரபைப்பற்றி ஆக்சிடன்ட் சீப் மினிஸ்டர் அளப்பது தர்க்கரீதியாக பயனிலையும், செயப்படுபொருளும் இல்லாத உளறலாகும்.

"இம்மாதிரி விழா''என்று கூறுகிறாரே. 'இம்மாதிரி' விழாவில் ஒரு திருக்குறளுக்காவது அன்வயப்படுத்திப் புதுப் பொருள் கூறினாரா?

குறள் எந்த யாப்பில் அமைந்திருக்கின்றது என்று வது தெரியுமா?

'வு' கரத்தில் முடிந்த திருக்குறளின் ஈற்றசை— வெண்பா இலக்கணத்திற்கு ஒவ்வாமல் இருக்கிறதே ஏன் என்றுவது தெரியுமா!

சரி— இம்மாதிரி விழா'வில் அரசியல் பேசக்கூடாது என்றால்—அரசியல் பேசுவதற்கு என்றே இருக்கின்ற 'சட்ட மன்றத்தில்' இவர் கிழித்த அரசியல் என்ன?

உலகஅரசியல்ஞானிகளின் (பொலிட்டிக்கல் பிலாசபர்) பெயர்களை வரிசைப்படுத்தியாது சொல்லத் தெரியுமா?

என்னவோ இவர் 'அரசியல்' என்ற வார்த்தையை மனப்பாடம் செய்து கொண்டாரே தவிர.

'தாவர இயலுக்கும்(பாட்டனி) அரசியலுக்கும் தொடர்பு உண்டு என்ற 'ஸ்கூல் ஆஃப் தாட்'டைப் பற்றி இவருக்குத் தெரியாது.

கஞ்சாக் கீரைக்கும் சிறுவுக்கும் தர்ப்பைப் புல்லுக்கும் தமிழ்நாட்டுக்கும் தொடர்புடைய அரசியலில் 'தாவர இயல்' முன்னணியில் நிற்கிறதே அது ஏன் என்றுவது தெரியுமா?

'தெரிந்தோ. தெரியாமலோ, வள்ளுவர் அரசியல் பற்றிக்கூறி இருக்கிறார்'

இது எம்.ஜி.ஆரின் அடுத்த வாக்கியம்.

என்னவோ திருவள்ளுவர் 'இம்மாதிரியான விழாக்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் நடந்தபோது தெரிந்தோ தெரியாமலோ 'அரசியல் அதிகாரத்தை' எழுதிவிட்டதைப் போல் எம் ஜி. ஆர். கூறுகிறார்!

இப்பொழுதுதான் நமக்குத் தெரிகிறது — வள்ளுவர் அரசியல் பற்றித் தெரிந்தோ, தெரியாமலோ எழுதும் 'மூளைக்குழப்பி என்று

தெரியாமல் எழுதவோ பேசவோ முதலமைச்சர் எம். ஜி. ஆரால் முடியுமே தவிர — உலகப் பொதுமறையின் தந்தைக்கு எப்படி முடியும்?

எதைத் 'தெரிந்தோ' — எதைத் தெரியாமலோ' வள்ளுவர் அரசியல் பற்றிக் கூறி இருக்கிறார்? என்று தர்க்கம் (லாஜிக்) கேட்கிறது!

வள்ளுவர் கோட்டத்தைக் கட்டியவனை நன்றி கெட்டதனமாக ஒதுக்கிவிட்டு —

வள்ளுவர் கோட்டத்தையே 'ஊழல்' புகாரில் சேர்த்த மனிதர்களைத 'தெரிந்தோ' 'தெரியாமலோ' அரசியல் பற்றி வள்ளுவர்கூறி இருக்கிறாரா?

ஆகவே இம்மாதிரி' விழாக்களில் அரசியல் மரபாகாமல் போய்விட்டதா?

எனவே இரண்டாவது வாக்கியத்தின் மூலமாக எம். ஜி. ஆர். வள்ளுவனையே எடைபோட முயன்றிருக்கிறார்.

வள்ளுவனுக்குத் 'தெரிந்தது' திருக்குறள்.

அவனுக்குத் 'தெரியாதது' எம் ஜி. ஆர்.

'தண்ணீர் இலையைப் போன்று பச்சை நிறமுடைய திடப்பொருள்' என்று ஒரு வாக்கியம் இருந்தால்—இலக்கணப்படி வாக்கியம் சரி.

ஆனல் தர்க்கப்படி —

தண்ணீர் திடப்பொருள் அல்ல—மேலும் இலையைப் போன்று பச்சை நிறமுடையது அல்ல, காரணம் தண்ணீர்க்கு வண்ணம் இல்லை!

எம். ஜி. ஆரின் இரண்டாவது வாக்கியம் இலக்கணப்படி சரி—தர்க்கரீதியாக முட்டாள்தனத்தின் இமாலயத்தோற்றமாகும்.

அகராதியில் வரும் பத்து, பதினைந்து வார்த்தைகளைத் தெரிந்து வைத்துக்கொண்ட ஒரே காரணத்திற்காகத் தன்னைக் கட்டுரை மன்னன் என்றோ — உரையாடல் வேந்தன் என்றோ — பேச்சுப்புலி என்றோ நினைத்துவிடக்கூடாது

'தெரிந்தோ — தெரியாமலோ' என்றதொடரைப்பயன்படுத்த வேண்டும் என்பதற்காக 'அறிஞர் அண்ணா தெரிந்தோ தெரியாமலோ அரசியல் பேசினார்' என்று கூறுவது—எவ்வளவு முட்டாள்தனமோ — அதைவிட அழுத்தமான சுத்தமான, வடிகட்டிய வைரம் பாய்ந்த முட்டாள் தனம். 'வள்ளுவர் தெரிந்தோ தெரியாமலோ அரசியல் பேசினார்' என்பது.

ஆகவே திண்ணைப்பள்ளிக்கூட, அறிவுகூட முழுமையாக வந்து சேராத மூளைகள் திருவள்ளுவரை ஆராய்வது 'வான் கோழி மயில் ஆக முயல்வது' போலாகும்.

உளறல்..!

எனவே, எம். ஜி. ஆரின் இரண்டாவது வாக்கியம் தர்க்கரீதியாக 'யூனிவர்சல் பிரோபசலில்' விழுந்த வடு ஆகும்.

'நானும் சிலவற்றை இங்கே கூற விரும்புகிறேன்.'

இது எம். ஜி ஆரின் மூன்றுவது வாக்கியம்.

'தெரிந்தோ — தெரியாமலோ வள்ளுவர் அரசியல் பற்றிக் கூறினார்' என்பதே பொய்,

ஒரு பொய்யின் அடி ஒற்றி

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

கவிஞர் குடியரசு

மொரார்ஜி தேசாயின் பிடிவாத போக்கு

ஏற்கனவே இருக்கின்ற பிரச்சினைகள் போதாது என்று. புதிதாக ஒரு பிரச்சினையைக் கிளப்பியுள்ளார் இந்தியத் தலைமை அமைச்சரான மொரார்ஜி தேசாய்.

பிடிவாதத்திற்குப் பெயர் பெற்ற அவர், பாண்டிச்சேரி பக்கத்து மாநிலத்தோடு இணைக்கப்பட்டே தீரும் என்று வழக்கம்போல் 'அடித்துப்' பேசியுள்ளார்.

'இணைப்பிலிருந்து பாண்டிச்சேரி தப்ப இயலாது' என்ற அவருடைய கூற்று, பிறர் கருத்துக்களைச் செவிமடுக்க என்றும் அவர்பொறுமை காட்டியதில்லை என்பதை மெய்ப்பிக்கிறது.

இணைப்பிற்கு அவர் கூறும் முக்கிய காரணங்களில் ஒன்று - அங்கு நிலையான ஆட்சி இல்லை என்பதே ஆகும்!

இது ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமல்ல! ஏனென்றால் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பாண்டிச்சேரியில் தி. மு. க. நிலையான ஆட்சியை நடத்திக் காட்டியிருக்கிறது. மேலும் — ஆட்சி, நிலையில்லாமல் ஊசலாடிக் கவிழ்ந்த கதை பாண்டிச்சேரி மாநிலத்தில் மட்டும்தானா நிகழ்ந்திருக்கிறது? விடுதலைக்குப்பிறகு இந்திய மாநிலங்களில் எத்தனையோ 'நிலையற்ற ஆட்சி' என்ற வெட்டுக்கத்திக்குப் பலியான கதைகள் தேசாய்க்குத் தெரியாதா?

அப்போதெல்லாம் யாருமே நிலையற்ற ஆட்சியைக் காரணம் காட்டி ஒரு மாநிலத்தைப் பக்கத்து மாநிலத்தோடு இணைக்கும் 'அபூர்வமான' கருத்தை வெளியிட்டதே கிடையாது.

பாண்டிச்சேரியில் 'நிலையற்ற ஆட்சி' நடந்ததற்காக அம் மாநிலத்து மக்களின் கருத்தைக்கூட அறிய முன்வராமல் மொரார்ஜி தேசாய், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியுள்ளார்.

இந்தித் திணிப்பிலும் மாநில விவகாரங்களில் எல்லை மீறி தலையிடுவதிலும் செலுத்தும் அக்கறையை நாட்டின் முன்னேற்றத்திலும், மக்களின் நல்வாழ்க்கையிலும் காட்டினால் அது ஜனதா கட்சியின் — மொரார்ஜி தேசாயின் மதிப்பை மேலும் உயர்த்தும் அல்லவா?

எழுச்சி மிக்க திருச்சி மாநாடு!

...அடாத மழையிலும் கட்டுப்பாட்டுடன் நடந்த அணிவகுப்பும் சகதியிலே கூட சகோதரிகளும் தாய்மார்களும் அமர்ந்து கொண்டதும் ஒரு லட்சத்து இருபத்தோராயிரம் ரூபாய்நுழைவுக் கட்டணமாகவே வசூலானதும் கலைஞருக்கு இருக்கும் செல்வாக்கை உணர்த்துவதோடு இந்தித் திணிப்பிலே தமிழருக்கு இருக்கும் வெறுப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

...பாரதத்தின் ஒருமைப்பாட்டில் கவலை கொண்டிருப்பதாகக்காட்டிக்கொள்ளும்தி.மு க. இந்தித் திணிப்பை எதிர்த்துத் துக்க தினம் அனுஷ்டிக்க தேசிய தினமாகிய ஜனவரி 26.ந் தேதியைத் தேர்ந்தெடுப்பானேன்?' என்ற கேள்வி எழும்.

தேசிய எண்ணங்களுக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கும்விதமாக இந்தி வெறியர்களின் போக்கு அமைந்திருப்பதை வன்மையான முறையில் எடுத்துக் காட்டத்தான் குடியரசுத் தினத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார்களேயன்றி இதற்கு நேர்மாறான ஓர் அர்த்தத்தில் அல்ல.

('கல்கி' 7—1—79 இதழ்
தலையங்கத்திலிருந்து)

நமது அவசியத்திற்காக அல்ல-வடவர் ஆதிக்கத்தின் பேரால்

வருகிறது இந்தி!

இந்த நாட்டில் இந்தி வரக்கூடாது என்பதற்காக நாம் 1938 ஆம் ஆண்டு முதல் நம்முடைய எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி வந்திருக்கிறோம்; அப்படி இருந்தும் இப்பொழுது தமிழ் இருக்க வேண்டிய இடத்தில் இந்தி ஆதிக்கம் செலுத்த முனைகிறது! இந்தத் தமிழ் நாடு என்றும் தங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும் என்று வடக்கே இருப்பவர்கள் கருதுகின்றனர். அந்த எண்ணத்தை முறியடிக்கத்தான் போர்க் கொடி உயர்த்தியிருக்கிறோம்.

இந்த நேரத்தில் நம்மைப் பார்த்து சிலர் 'தமிழ் வெறியர்கள்' என்கிறார்கள் அவர்களுக்குச் சொல்கிறேன்—'நாங்கள் இந்தியின் மீது ஆதிக்கம் செலுத்த எண்ணவில்லை' என்று கூறுவதை அவர்கள் நன்றாகச் சிந்தித்துணர வேண்டும். தமிழிலே கார்டு கவர் அச்சடித்து வட நாட்டிலே கொடுத்தால், அந்த அஞ்சலகங்கள் அங்கு கொளுத்தப்படும்—அதிகாரிகள் கொல்லப் படுவார்கள்—அந்த அளவுக்கு வட நாட்டில் மொழி வெறி நிறைந்திருக்கிறது என்பதையும் அவர்கள் உணர வேண்டும். உண்மையில் இந்தி திணிக்கப்பட்டுவிட்ட இந்த நேரத்தில்கூட நாம் அறவழியில் நின்றுதான் நமது பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறோம்.

இந்தி பிறந்த நாட்டில் எல்லா இடங்களிலும் இந்தியே இருக்கட்டும் நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால் நமக்கு அந்த இந்தி ஒரு துளியும் வேண்டாம், இங்குள்ள தமிழ் மக்களோடு தொடர்பு கொள்ளத் தமிழ் போதும்' பிற மாநிலங்களோடும், பிற நாடுகளோடும் தொடர்பு கொள்ள ஆங்கிலம் போதும்!

நமது அவசியத்திற்காக இந்தி இப்போது இங்கு வரவில்லை — வடவரின் ஆதிக்கத்தின் பேரால் வருகிறது; இதை நாம் எதிர்த்துத் தடுத்தே தீர வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

4–7–60

(சென்னை 79 வது வட்டப் பொதுக்கூட்டத்தில் பேசியது)



உடைமைகள் பத்து

வள்ளுவர்க்கு விழா எடுக்கும் வாகான திருநாளில்
வந்திருக்கும் அனைவர்க்கும் வணக்கம்
வரவேற்புக் குழுவுக்கும் வணக்கம்
கொத்தான மீசை
முத்தான பேச்சு
சத்தான கருத்து எழுச்சிக்கு
வித்தான தமிழர்
வண்டாடும் சோலை
கண்டாடும் மயில் போலத் தமிழ்
உண்டாடும் செல்வர்க்கு வணக்கம்
உடைமைகள் பத்தென்று உரைத்திட்ட வள்ளுவனை
உரித்த சுளைத் தமிழால் நான் காட்ட வேண்டுமென்று
பலமுறையும் தலைசொறிந்தேன் கற்பனையே வரவில்லை
கலங்கிவிட்டேன்
ஏடெடுத்தேன் எழுதிமுடித்தேன்; என்றே என்வழக்கம்
இதுவரையில் ஆனால் திரு
ஓடெடுத்த பரதேசி பல
வீட்டுத்தும் பயனின்றி நிற்பதுபோல் நின்றேன்
கவி வராக் காரணந்தான் கேட்கிறீர் என்சொல்வேன்?
கண்ணீர் முந்தும் சொல்வதற்குள் ஆனாலும்சொல்கின்றேன்
தன்வினை தன்னைச்சுடும்
ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்று
முன்னொரு நாள் பட்டினத்தார்
ஒரு வீடு கொளுத்தியதாய்க் கதையுண்டு; இன்றோ சில
பட்டினத்தார் — சென்னைப்
பட்டினத்தார் பல வீடு கொளுத்துகின்றார்
எரிவதெல்லாம் வீடென்று கருதுகின்றீர்;
ஏழைகளின் வயிறன்றோ? எங்கள்
மஞ்சமும் மாளிகையும் இந்த மண் வீடு தானென்று
பிஞ்சுகளாம் பிள்ளைகுட்டியுடன் வாழ்கின்றார்...
கொஞ்சமும் இரக்கமிலாக் கொடியவர்கள்
நஞ்சு நிறை பாம்பனையோர் வெறிகொண்ட
பேயனையோர் நமனும்
அஞ்சுகின்ற காரியத்தைச் செய்கின்றார்; அவரெல்லாம்
பஞ்சுபஞ்சாய்ப் போவதற்குச் சாபமிடு
சாபமிடு அவர்க்குத்
தூபமிடும் துரோகிகளும் தூள்தூளாய்ச் சிதறடவே
சாபமிடு தமிழ்நாடே! நீ சாபமிடு!
இப்படி எண்ணித் துடிக்கின்ற போது
எப்படி வரும் கவிதைக்குத் தூது?
அடங்காச் சினத்தாலே
அடபாவி அழிந்திடுக என்கின்றேன்
"அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்
செறிவறிந்து சீர்மை பயக்கும்'' என்
அன்புருவாய் வள்ளுவரும் அடக்குகின்றார்
அடக்கமுடைமை அது; என் செய்வேன்?
மாடிழந்து கன்றிழந்து ஒண்டும்
வீடிழந்து உழல்கின்றார் நடுத் தெருவில்
இந்நிலைக்கு வித்திட்ட இழிதகையோர் வீழ்க என்று
இருதயத்தை அமுக்கிக்கொண்டு கத்துகின்றேன்
'அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை' என்று
அருளுடைமை அருள்கின்றார் குறள் அறிஞர்
அன்புடைமை
அறிவுடைமை
ஆள்வினையுடைமை
பண்புடைமை
நாணுடைமை
பொறையுடைமை
ஒழுக்கமுடைமை
ஊக்கமுடைமை
இப்படிப் பத்துடைமை இயற்றிக்காட்டி
எனைத் தேற்ற முயல்கின்றார் வள்ளுவரும்! ஆனால்
சொத்துடைமை இல்லாத மக்கள்
சொறிநாய் போல் எரிநெருப்பின்
பெருநாக்கில் சிக்கிவிட்ட சீரழிவை
ஒருநாக்கால் சொல்வதற்கோ முடியுமய்யா?
கருநாக்கு படைத்தவரே!...
சபித்திடுவீர் கயவர்களை எனச்சொன்னால்
வள்ளுவரின் திருவாக்கும் உடன்சேரும்
—அவ்வாக்கு
'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்!''
அந்த
அறம்பாடி அநியாய மனிதர்களை அழித்திடுவோம்
புறம்பாடி வாழ்ந்திருந்த தமிழகத்தில்
பொல்லாங்கை ஒழித்திட்டோம் என்று புதிய
திறம்பாடி மகிழ்ந்திருப்போம்—தீமைகளைச்
சாய்த்திடுவோம்
தீவைக்கும் பிராணிகளை மாய்த்திடுவோம்
இங்கு
நாலாறு கவிதைகள் வந்து—
பாலாறு தென்பெண்ணை காவிரிபோல் பாட்டாறு
பெருக்கெடுக்கச் செய்யும்போது சென்னைக்
கோளாறு பற்றி நான் கூறியதைப் பொறுத்தருள்வீர்...
பொறுக்கவில்லை என் நெஞ்சம்
அதனாலே புலம்பிவிட்டேன்!
வள்ளுவர்க்குச் சிலை வைத்துச் சிறப்புச்
செய்யும் தமிழ்நாடு
அதை எதிர்த்துத்
துள்ளுவார்க்கு மூக்கணாங்கயிறு மாட்டும் மறவர் வீடு
ஐந்தெழுத்தில் வள்ளுவர் அறிக என்போம். அறியாதார்
இரண்டெழுத்தில்...'வள்' என்று குரைப்பார்...
மூன்றெழுத்து குறைப்பார்
'வள்'ளுக்கு இடையே கால் போட்டு
வாள் என்போம் வஞ்சகத்தைப் பொடியாக்க!
நாம் ஒரு வாள் எடுத்தால் — அவர் இரு
வாள் எடுத்து 'வாள் வாள்' என்பார்;
வள்ளுவரைப் பேருந்தில் இலவசமாய் நான்
பயணம் செய்ய வைத்தேன் என்பார் இங்கிருப்போர்
இல்லை இல்லை வள்ளுவர் படம் மாட்டியதால் —விபத்துக்கள்
ம வாகப் போனதென்பார் சில நண்பர்
தமிழர்
சிந்தை அணு ஒவ்வொன்றும் உணர்வேற்றும்
வள்ளுவரை இகழ்வதற்கும்
விந்தை மனிதர் இருக்கின்றார். நல்ல வேளை
வீழ்ந்து விட்டார் அறுபத்தேழில்!
ஆட்சிமொழி தமிழென்றால் ஆகாதெனல்
என்ன அறிவுடைமை?

கருணாநிதி

ஆதிக்கம் பிறமொழிக்கா எனக் கேட்டால்
ஆம் எனல் என்ன தமிழ் அன்புடைமை?
இவரெல்லாம் இருப்பதை நினைத்து விட்டால்
சுவரில்லாச் சித்திரம் போல் தமிழ் நாடு
இருபதாண்டு இருந்ததென்ன விந்தையென்று
எண்ணத் தோன்றும்
இவர்க்கிடையே வள்ளுவரும் தப்பிப் பிழைத்த
கதை வியப்பைத் தூண்டும்
வாழ்ந்துகெட்ட நாட்டுக்கு மட்டுமா விடுதலை?
வீழ்ந்துவிட்ட தமிழர்க்கு ஒளியளிக்க
வள்ளுவப் பெரியார்க்கும் விடுதலை...
வளமலியும் தமிழுக்கும் விடுதலை...
விடுதலையின் வெளிச்சமெனும் சவுக்கடியால்
கெடுதலையின் இருட்கூட்டம் விரட்டிடுவோம்
கொடு "தலையை!'' எனச் சொன்னாள் அன்னையென்று
கொடுத்திட்டார் தீக்குளித்துத் தமிழர் பல்லோர்
சுடப்பட்டார் சுடலைசென்றார் அவர் மனைவி
விடப்பட்டார் விதவையாக
சிறைப்பட்டார் செக்கிழுத்தார்
தரைபட்ட மீன்போலத் தமிழ் காக்கத் துடித்துச் செத்தார்
அவரெல்லாம் காத்த கட்சி
அடக்குமுறை ஏற்ற கட்சி நேற்று
ஆங்கில ஏடொன்று "போதாது தியாக'' மென்று
அரைகுறை எழுத்தொன்றை எரிச்சலால்
கிறுக்கக் கண்டேன்
எங்கய்யா இந்தியாவில் எட்டுப்பேர் தீக்குளித்தார்?
இங்குதான் தமிழகத்தில் மொழிக்காகத்
தணல்வாய் வீழ்ந்தார்!
பொங்குது எங்கள் உள்ளம் அந்த ஏட்டின்
புலம்பல் கண்டு—தனித்
தொங்கிடும் கடையில் ஏடு வாங்கிட ஆளே இன்றி!
தமிழ்வாழத் தலைகொடுத்த தமிழர்களைத்
தரக்குறைவாய் எழுதியதால் — இன்றைய
தலைப்பான வள்ளுவனை விட்டுவிட்டுத்
தலைபோன மனிதர் பக்கம் சென்றுவந்தேன்
மன்னிப்பீர் என்னை
எதுகை மோனை இப்போது பத்துமாதம்
இன்னும் பிறக்கவில்லை
சீர் தளைக்கும் சீமந்தம் ஆகவில்லை
வேர் தகைத்த பலாக்கனி போல் கவி வழங்கப்
பேர் பொறித்த பாவாணர் இருக்கின்றார்
மாலையிலே
பூ மாலையிலே நார் போல நானிருந்து
மணம் பெறுவேன் தமிழ்த் தார்வேந்தர் இன்றிருந்தால்
இவர்க்கும்
பார் புகழும் பரிசளிப்பார் — என்பரிசோ இவரை
ஊர் அறிய மெச்சுவதேயாகும்.
வணக்கம்.
வாழ்க.

வீர வணக்கத்துக்குரிய

தியாகச் செம்மல்கள்!

நம்முடைய பொதுக்குழு இந்தியை எதிர்த்து அதனை ஒழித்துக்கட்டப் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில்தான் நாம் நம்முடைய கழக இலட்சியத்திற்காக உயிரை இழந்தவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

தூத்துக்குடியிலே ஒரு தமிழ்ப் புலவர் இருந்தார்; எளிய குடியிலே பிறந்தவர்; இலட்சியத்திற்காகவே வாழ்ந்தவர்; 1953-ஆம் ஆண்டிலே நாம் நடத்திய மும்முனைப் போராட்டத்திற்கு இரண்டு கால்களோடு வந்தார்; இப்போது அவர் ஒரு காலை காங்கிரசு ஆட்சியாளர்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்துவிட்டு, ஒரு காலோடு இருக்கிறார்! வெட்டுக்கிளி, தத்தித் தத்திப் போவதைப்போல அந்தப் புலவர் இன்றையத்தினம் தத்தித்தத்தி நடக்கிறார்.

இந்த நிலையைப் பார்க்கின்ற இளைஞர்கள் — ஆட்சியாளரின் போக்கினைக்கண்டு துடியாய்த் துடிக்கிறார்கள், பெரியவர்கள் இந்த ஆட்சியாளர்களைக் காரித்துப்புகிறார்கள்! தாய்மார்கள் அவரைப் பார்க்கும்போது மனம் தாளாமல் தங்கள் புடவையால் கண்களிலே பிறிட்டுக்கொண்டுவரும் கண்ணீரைத் துடைத்துக் கொள்கின்றனர்.

இப்படிப்பட்ட நேரங்களிலே அப்படிப்பட்டவரை நாம் மனத்திலே நினைத்துக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்டவருக்கு வீர வணக்கம் தெரிவித்துக்கொண்டு நாம் நம்முடைய போராட்டத்தைத்துவக்க இருக்கிறோம்.

— பேரறிஞர் அண்ணா

(27–6–1960-ல் சிதம்பரத்தில் நடந்த கே. ஆர். இராமசாமி பாராட்டுக் கூட்டத்தில் பேசியது)

இறுதி மூச்சுவரை

இந்தித் திணிப்பை எதிர்ப்போம்!



1938-லிருந்து நாம் இந்தியை எதிர்க்கிறோம். நமது போராட்டம் இத்துடன் முடிந்து விடாது என்றார் இல்லை; இறுதி வெற்றி கிட்டும் வரை போராடுவோம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் திடீரென்று தோன்றியது அல்ல; நாடு பிரிய வேண்டும் என்ற எண்ணம் உருவானதே இந்தி எதிர்ப்பால்தான்.

1938-க்கு முன் தமிழ்நாடு தமிழருக்கே' என்றோ திராவிட நாடு திராவிடருக்கே என்றோ யாரும்கூறவில்லை. ஆச்சாரியார் காலத்தில் இந்தி புகுத்தப்பட்டதால் அதனை எதிர்த்தோம் அதன் விளைவாகத்தான் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்றோம்!

பாகிஸ்தான் கேட்ட ஜின்னா முஸ்லீம் தொடுக்கிற தண்ணீரை இந்திய குஷ்டரோகி கூடக் குடிக்க மறுக்கிறானே எப்படி அவர்களுடன் ஒன்றாக இருக்க முடியும்? என்று கேட்டு பாகிஸ்தான் வேண்டும் என்றார்

இந்தியர்களையும் முஸ்லீம்களையும் ஒன்றுபடுத்த இந்துஸ்தானி' மூலம்தான் ஒற்றுமை வளரும் என்றார் காந்தியார். இந்தியையும் உருதுவையும் ஒன்றுபடுத்திய இந்துஸ்தானி' வேண்டும் என்றார்; ஆனால் இவர்கள் 'ஸ்தானி'யை எடுத்து விட்டு இந்தியாக ஆக்கிவிட்டார்கள்.

இந்துஸ்தானி இந்தியா முழுமைக்கும் வர வேண்டும் என்று காந்தியார் சொன்னதை எதிர்த்து 1932. 1933 லேயே பெரியாரின் குடியரசுப் பத்திரிகை எழுதியிருக்கிறது.

— பேரறிஞர் அண்ணா
(மாயூரம் பொதுக் கூட்டம்)
10 7-66

★

உளறல்..

(5 ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த எம் ஜி ஆரின் பொய்தான் இந்த மூன்றாவது வாக்கியம்

பொய் பேசுபவன் அதை விரும்பிப் பேசுவதில்லை—
பொய் பயத்தின் அலை!
பயந்து போன கோழையின் நடுக்கம் சத்தமாக உருவெடுத்தால்—அதைக் 'கூறுதல்' என்ற வினைச்சொல்லில் விளக்கக்கூடாது'

'உளறல்' என்ற வினைச் சொல்லே பொருத்தமுடையது!

இப்போது நான்காவது வாக்கியத்திற்குப் போவோம்.

'தமிழைக் காப்போம் என்றால் இன்னொரு மொழியைத் தாக்குவோம் என்று பொருள் அல்ல.'

இது எம். ஜி. ஆரின் நான்காவது வாக்கியம்; இதுதான் உளறல்.

தமிழ் பிறமொழிகளைத் தாக்கியது கிடையாது. பாவாணர், கா. சு. பிள்ளை போன்றவர்களின் ஆராய்ச்சியைப் படிக்க வேண்டும்.

'தமிழைக் காப்போம்' என்கிற உணர்ச்சி இந்தி ஆதிக்கம் வந்த பிறகுதான் வந்தது என்பதை 'கோதாவுக்கு வராமல் கோவாவுக்கு ஓடியவர்கள் உணர வேண்டும்.

தமிழ்காக்கும் பணியில் ஈடுபட்டவர்கள் தன்னை நெருப்புக்குமத்தியில் கருக்கிக்கொண்டார்களே தவிர, எந்தமொழியையும் தாக்கவில்லை என்பதை இந்த மாமேதை உணர வேண்டும்.

'பிறமொழியைத் தாக்கக் கூடாது' என்று வக்காலத்து வாங்குகிற முதலமைச்சர்க்கு ஒரு கேள்வி!

ஒரு தாக்குதலைத் தாங்க வில்லை என்றால், அந்த மொழிக்காக முதலமைச்சர் வருந்துவானேன்?

இப்போது இருக்கிற பிரச்சினை தாக்குதல்' பிரச்சினை அல்ல — 'ஆதிக்கப் பிரச்சினை'

தமிழ் எத்தனையோ உயர் தனிச்செம்மொழிகளின் தாக்குதலைத் தாங்கித்தான் இன்னும் உயிரோடு இருக்கிறது

மேலும் தமிழ்வேர்ச்சொற்களை மற்றமொழிக்கு வழங்கி இருக்கிறது: தாக்கவில்லை.

இந்தியை நேரடியாக எதிர்க்க முடியாத கோழையின் 'உளறல்' தான் நான்காவது வாக்கியம்.

ஆகவே எம் ஜி ஆரின் நான்காவது வாக்கியம் தர்க்க ரீதியாக பர்ட்டிகுலர் பிரோ பசலில்' விழுந்த சொட்டையாகும்.

தடிமரத்தை ஈன்றவளா தமிழ மங்கை?

தாயே!

கருவிலே உருவாகி, உருவிலே
உயிராகி. உன் திருவயிற்றிலே
நிலையாகி பின் உலகிலே உயி
ரானோம்.

அன்னையே

உன்னினும் இனிமை உயிரினும்
மேன்மை எங்களின் இதயத்தில்,
இயக்கத்தில், உயிரில், உணர்வில்
ஒன்றாய்க் கலந்து, உயிராய்
வளர்ந்த தாய்மொழியாம் தங்க
நிகர் தமிழ் மொழிக்கு உண்டு.

தாயே

உன்னைப் பழித்தவர், எம்மை
அழிப்பவர்; வெம்மை கொடுப்
பவர்.

உன்னினும் மேன்மை. சொல்லினும் இனிமை, என்னரும் தமிழை இரண்டாம் மொழியாக்கிட எவரேனும் முயன்றால், எப்படிப் பொறுப்போம்?

சிங்கமெனப் பொங்கி எழுவோம்,
சீற்றம் கொள்வோம்!
எம் தாயென எவளையோ
கூட்டி வருவானைக்
காரி உமிழ்வோம்!

கடையனென இகழ்வோம்!

'செத்த குதிரை'யல்ல எங்கள் உணர்வுகள்; சீறும் சிங்கங்கள், வந்தவர்க்கெல்லாம் நடைபாவாடை விரிக்கும் இனமல்ல: எங்கள் இனம்

கட்டுண்டோம் பொறுத்திருக்கிறோம்!
நதி வருமுன், மணம் தருமுன்
நலம் வளர்த்த தமிழணங்குக்கு
வேதனை வந்திட்டால் .சோதனை எமக்கல்ல
நாட்டின் ஒருமைப்பாட்டிற்கே

இந்திக்குத் தமிழென்ன தாழ்வு? இதை
எதிர்க்காத தமிழருக்கு இனி என்ன
வாழ்வு?

ஆண்ட தமிழருக்க அடிமை
இந்திக்கு அரியாசனமா?
சொந்த மொழி மாள
வந்த மொழி ஆளவா?

கண்ணை விற்றுச்சித்திரம் வாங்கவோ!
கற்பை விற்றுக்கணவனைப் பேணவோ?
கன்னித் தமிழைக் காரிருளில்
தவிக்கவிட்டுத்

'தேசியம்'பேசி நாட்டுப்பற்றினை ஓதி
நலங் கெடும் தமிழா!
தாய் தளையுண்டு கிடக்கும்போது
பேய் போல உறங்குகின்ற தமிழா!
தெவிட்டாத் தேனிருக்க

குமட்டும் நஞ்சு குடிப்போர்
உடலில் ஓடுவது குருதியா? சாக்கடையா?
அடிமையாய்ப் பிறந்து

அடிமையாய்ச் சாகவா பிறந்தாய்?
சொல்லுங்கால் எரியுதடா வயிறும்!
உன்னைச்
சுமந்தவளும் தமிழ்ப்பெண்ணா?
கூறியவாளால்
சல்லி சல்லியாய் அவளைச்
சிதைக்க வேண்டும்

தடி மரத்தை ஈன்றவளா தமிழமங்கை?
"தாய் பிறன் கைப்படச் சகிப்பவனைி
நர்யென வாழ்பவன் நமரிலிங்குளனோ?"

-வீரசோழன்

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00
ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

உழைப்பிற்கு நாம்!
உறுதிக்கு நாம்!!

எங்கள் சென்னை நகர் பிரதிநிதி;
கே. எம். ஜி. மாதவன்,
11. புதுத்தெரு, மைலாப்பூர்
சென்னை-4

தொலைபேசி எண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு: விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

உரிமையாளர்
பே. தேவசகாயம்
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

சாவும் தமிழர்க்கு அமிழ்தாகும்!

இந்தியத் தலைநகரில் கோலோச்சுகின்ற ஜனதா அரசின் அலங்கோலங்களில் ஒன்றாக இந்தியைத் திணிக்கும் வெறி இடம் பெறத் துவங்கி விட்டது. கோமாளிகளின் கூடாரத்தில் எழுகின்ற நொக்கரிப்பு நம் செவிகளில் வந்து விழுகிறது "தமிழன் என்றோர் இனம் உண்டு; தனியே அவர்க்கோர் குணம் உண்டு" என்பதனை மறந்து விட்டார்கள் போலும்.

அமுதுதனும் இனிய தமிழ், செந்தமிழாய் — கன்னித் தமிழாய் — காலங்கடந்தும் வாழ்கிறது — வளர்கிறது – செழிக்கிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர் தனைவருக்கும் தமிழே இரு கண்களாக விளங்குகின்றன. நம்மைத் தழுவத் துடித்துக் கொண்டிருக்கும் இந்திவெறும் 'புண்' ஆகும். கவிதை பேசும் தமிழ்க் கண் எங்கே, காணக் கூசும் இந்தியாம் 'புண்' எங்கே? பாரதிதாசன் பாடுகிறார்:

> தாய்மொழிதான் கண்கள்
> தழுவும்மொழிகள் புண்கள்

இந்த வரிகளின் அர்த்தத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்வார்களா?

ஆட்சி பீடத்தில் அமர்ந்து விட்டோம் என்பதற்காக எதையும் செயலாக்கலாம் என்பது எவ்வளவு மடமை நிறைந்த செயல் என்பதை இந்தியப் பேரரசு உணர்ந்து கொள்ளவில்லையே? தேளுக்கு அதிகாரம் கிடைத்துவிட்டால் கொடுக்கால் விளையாடுவதைத் தவிர வேறென்ன செய்யும் அத்தேள்? இதோ பாரதிதாசனின் ஆவேசம்:

> தேளுக்கு அதிகாரம்
> சேர்ந்துவிட்டால்.
> தன்கொடுக்கால்
> வேளைக்குவேளை
> விளையாடும் என்தோழா

உண்மைதானே! தேளுக்கு அதிகாரம் கொடுத்தது தவறல்லவா?

எப்போதும் தமிழர்கள் பொறுமைசாலிகளாய் இருப்பார்கள் என்று மட்டும் எவரும் தப்புக்கணக்குப் போட்டு விடவேண்டாம். புறநானூற்று வீரம் பாடிய தோள்கள் வெறும் 'தோல்' என்றுகேலி பேசுவோரைப் பார்த்து உலகம் சிரிக்கும்

> ஆளாக வந்தவர்
> ஆள்வதும் ஆண்டவர்
> ஆ பட்டிருப்பதும்
> வெட்கம் — மறந்
> தோளாய் இருந்தவை
> தோலாயின என்று
> சொன்னால் இவ்வையம்
> சிரிக்கும்!

என்பது புரட்சிக் கவியின் வாக்கு.

இந்தியத் திருநாட்டில் மொகலாயப் பேரரசு ஆட்சி நடத்திய நாளிலும்கூட அவர் மொழியை ஆட்சிமொழியாக அறிவித்ததாக நாம் அறியவில்லை. ஒருவருடைய தாய்மொழிக்கு நேரெதிர்ப்பாகத் தம்முடைய மொழியை எவரும் வற்புறுத்தவில்லை என்பது வரலாறு கூறும் உண்மை. ஆனால் இப்போது மட்டும் ஏன் இந்த இழிநிலை? என்னிப் பார்த்த பாரதிதாசனின் எண்ணம் ஆவேசமாக வெளிப்படுகிறது:

> மொகலாயர் வந்து
> முடிபூண்டும்,
> தம்மொழிதான்
> சகலர்க்கும் சட்டமென்று
> சாற்றவில்லை என்தமிழா!

தாய்மொழிக்கு நேரெதிர்ப்பாய்த் தம்மொழியை வற்புறுத்தும் பேய்களை நாம் கண்டதில்லை பேருலகில் என் தமிழா!

தமிழர்தம் எண்ணத்திற்கும் கொள்கைக்கும் உறுதிப்பாட்டுக்கும் மாறாக இந்தித் திணிப்பு இருந்தால்–திண்மையும் உண்மையும் வண்மையும் கொண்ட தமிழர்கள் சும்மா இருந்துவிடமாட்டார்கள் என்பது உறுதி. ஒண்சுடர் வான் நிலை உள்ளளவும், புகழ் ஓங்கித் தமிழகம் வாழ உயிரைத் துச்சமாக எண்ணிப் போர்க் காவியம் படைப்பதில் உறுதியாய் நிற்பார்கள் தமிழர்கள். ஏனெனில் —

> தாயகத்தின் மீட்சிப்
> போரினில்
> சாவும், தமிழர்க்கு
> அமிழ்தாய் இனிக்கும்.

டாக்டர்
என். கடிகாசலம்
எம். ஏ., பி எச். டி,

சுதந்திர நாளில்

வங்கம் கொண்டாடிய துக்க நாள்!

1960 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 சுதந்திர நாளை வங்காளத்து மக்கள் துக்க நாளாகக் கொண்டாடினர். அஸ்ஸாமில் வங்காளிகளுக்கு நேர்ந்த அவமானத்தைத் தடுக்க மத்திய அரசு தவறிவிட்டது என்று அதனைக் கண்டித்தும் பொருட்டும் கல்கத்தாவிலும் வங்கத்தின் பல்வேறு பகுதிகளிலும் கறுப்புச் சின்னம் அணிந்தும் கறுப்புக்கொடி பறக்கவிட்டும், கறுப்புக்கொடி ஏந்தி ஊர்வலம் நடத்தியும் பல்வேறு கட்சியினர் மௌன ஊர்வலம் வந்தனர்.

கல்கத்தா அருகிலுள்ள விஜயநகர் என்ற அகதிகள் காலனியில் பண்டித நேரு ட்ட பல மத்திய அமைச்சர்களின் உருவங்கள் வைக்கோலினால் செய்யப்பட்டு கொடும்பாவியாக இழுத்து வரப்பட்டு கொளுத்தப்பட்டது.

அந்த நாள்!

தென்றல் பிறக்கும்போதே சேர்ந்து பிறந்த மொழிதான் நம் தமிழ் மொழி!

அந்தச் செம்மொழிதான் ஆட்சி மொழியாகப் பதவி ஏற்க வேண்டும். அதற்குத்தான் அந்தத் தகுதியும் இருக்கிறது; உரிமையும் இருக்கிறது பூஜ்ய மொழி "இந்திக்கு அந்தத் தகுதியும் இல்லை. உரிமையும் இல்லை

பதினன்கு மொழிக்கும் நான்தான் அதிபதி என்று அடங்காத்தனத்தைக் காட்டுவது, ஒருமைப் பாட்டிற்கு ஏதோ உடல் நிலை சரியில்லையென்றுதான் பொருள்படுகிறது

எத்தனையோ முறை நம் மண்ணில் பதுங்கி நுழைந்து காலூன்றப் பார்த்ததும் உண்டுஇந்தி!முழங்கால்முட்டி அடி வாங்கி நொண்டி ஆனதும் உண்டு!

தந்தை பெரியாரின் தடி கொண்டு தாக்கப்பட்ட இந்திக்கு, அறிஞர் அண்ணாவின் பேனா முனையில் புறப்பட்ட சொல்லம்புகளுக்குத் தப்பியோடிய இந்திக்கு, கலைஞரின் புறப்பாட்டுச் சொல்லீட்டியைப்பார்த்து மருண்டோடிய இந்திக்கு இன்று அதிகாரம்புது இரத்தம் செலுத்தப் பார்க்கிறது. அதனால் புதுப் பாய்ச்சல் வேடம் போட்டு நுழைவதற்குச் சந்தர்ப்பம் பார்க்கிறது. அதற்கு ராகு காலமாக, எமகண்டமாக காட்சியளிக்கும் நாள்தான் ஜனவரி திங்கள் 26

அன்றுதான்துக்கதேவனின் நீதி மன்றத்தில் மகிழ்ச்சியையும் புன்னகையையும் தண்டிக்கப்படும் நாள்! இந்தித் திணிப்புக்கு "எதிர்ப்பு" எனும் வால் நட்சத்திரம் முளைக்கும் நாள்! ஆதிக்க உணர்வுகளுக்கு எரியூட்டகால தேவனுக்கும் நமக்கும் ஒப்பந்தக் கையெழுத்தாகும் நாள்! மொழிப்பற்றின் அசல்களுக்குத் துக்க நாள்! நகல்களுக்குத் திருநாளாகக் கூட காட்சியளிக்கலாம்.

இந்திப் பெண்ணுக்குப் பாவாடை கட்டி பாத பூஜை நடத்தும்உயிர்களுக்கல்லதுக்க நாள். பிறமண் கருத்தரித்துப் பெரியவர்களானவர்களுக்குத் துக்க நாள் அல்ல. புட்டிப் பால் குடித்தவர்களுக்கல்ல துக்க நாள் தமிழ்த் தாய்ப் பால் குடித்து வளர்ந்த உள்ளங்களுக்கு. உயிர்களுக்கு ஜனவரித் திங்கள்—26. துக்க நாளாகும்;

பெற்றவளுக்குத்தான் பிள்ளை அருமை தெரியும். தம் மினத்துக்குத்தான் தம்மொழி அருமை தெரியும்

தமிழ் மரபின் இரத்த ஓட்டமான இலக்கிய உணர்வுகளைக் கல்லறைபுரிக்கு அனுப்பத் திட்டமிடும்போது தமிழ்க் கருவில் தோன்றிய எவனும் இரசித்துக்கொண்டு "பிடில் வாசிக்க முடியாது. அதன் விளைவுதான். நம் கொதிப்பு உள்ளத்தின் வெளியீட்டு வடிவங்களான கறுப்புக்கொடி ஏற்றுதல், கருஞ்சட்டை ஊர்வலம். நடத்தல் துக்கநாள் மேற்கொள்ளுதல்!

தமிழரின் வேதனை வரலாற்றுத் தழும்புகளை விவரித்துக் காட்டும் நாள்தான் ஜனவரி திங்கள் இருபத்தி ஆறும்நாள்;

பாயும் வேங்கை மானைக் கண்டால் பதிபோடுவதுண்டு. அப்போது அதன் வீர உணர்ச்சியைக் காட்ட அதன் வாலின் நுனியே வளைந்து தலை உச்சியில் கொட்டிக்கொண்டே இருக்கும்

அதுபோல் தமிழகம் "திணிப்பு வெறியைக் கண்டு துக்கத்தில் பதிபோடும்போது இங்கே சிலர் தலையிலே கொட்டிக் கொண்டே இருக்கிறார்கள்; அவர்களுக்கு நம் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். காரணம் அவர்கள் கொட்டுவதனால்தான் நம் எதிர்ப்புவேகத்தின் உணர்ச்சியை மற்றவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்வதற்கு விமர்சனம் ஆகிறது.

சிந்தனைச் சொற்களுக்குத் தரித்திரம் கொண்டு சொற்பிச்சை யெடுக்கும் இந்தி, தமிழின் சிந்தனை ஊற்றுக் கண்களை மூடத் "திணிப்பு" என்னும் பூட்டைப் போட எக்காள மிடுகிறது அந்த எக்காளத்திற்குக் கடிவாளமிடும் நாள்தான் ஜனவரி திங்கள் 26 ஆம் நாள்

ஓடைப்பட்டி
சுப்பையா

ஒளியின் குபேரனே! உதயமே உன்னால்தான் பகல் ஜனனமாகிறது. பகலை நம்பித்தான் உயிரினமெல்லாம் நடைபோடுகிறது!

'அன்றுதான் எங்கள் இதயம் என்னும் இருண்ட சன்னதியில் துக்க அபிசேகம் நடத்தும் நாள். அன்று உன்னுடைய ஒளி விரல்களை மடக்கிக் கொள்! முகிற் போர்வையைப் போர்த்திக் கொள்! அது போதும் எங்கள் துக்கத்தில் பங்கு கொள்ள!

குருட்டு வெளிச்ச வள்ளலாகிய சந்திரனே! எப்போதும் இரவிலே வெளிச்சம் போடுவதே உன் தொழிலாகும். உன் பிறவியே இருட்டில் பதுங்கி வாழ்வதுதான். அதனால் உன் துக்கத்தை இருட் காலத்திலே காட்டிக் கொள்.

இயற்கைகளே; உங்கள் மூச்சொலிதான் எங்கள் முரசொலித் தமிழும், அதனால் எங்கள் துக்கத்துடன் இணைந்திடுவீர். உங்கள் இன்ப விளையாட்டுகளை ஒரு நாள் மறந்திடுவீர். தென்றலுடன் நீங்கள் கொள்ளும் ஊடல்களை ஒருநாள் ஒத்தி வையுங்கள்.

அன்றுதான் எங்கள் இனத் தலைவன் உடன் பிறப்புகள் அகிலம் வியக்க அணிவகுத்து நிற்கும் நாள்! கருஞ் சட்டை ஊர்வலக் கங்கையில் எங்கள் தலைவன் துக்கத் தோணியை ஓட்டும் நாள்! மொழி ஆதிக்க வெறியர்களுக்கு அபாயக் குறியாகக் காட்சி யளிக்கும் நாள்! அந்த நாள் ஜனவரி திங்கள் 26—நாள்!

★

★★★0★★★★

இஸ்மாயில் கமிஷன் அறிக்கை கதி என்ன?

கேரளத்திலிருந்து ஒரு செய்தி வந்திருக்கிறது. 2 துணைப் போலீஸ் சூப்பிரண்டெண்டுகள், 3 சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் ஆகியோர் மீது கேரள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 1975ம் ஆண்டு விஜயன் நாயர் என்பவரைக் கைது செய்து, சிறைக்குள் கொடுமைப்படுத்திய காரணத்தால் அந்தக்கைதி இறந்துவிட்டார். இதையொட்டி ஒரு விசாரணைக் கமிஷனும் அமைக்கப்பட்டது. கமிஷன் 5 போலீஸ் அதிகாரிகளும் குற்றவாளி என்று தீர்ப்பு வழங்கியது. கேரள அரசு 5 அதிகாரிகள் மீதும் வழக்கு தொடர்ந்துள்ளது. இவர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்திருக்கின்தனர். இது கேரளத்துச் செய்தி!

தமிழ் நாட்டில் இஸ்மாயில் கமிஷன் என்ற ஒரு கமிஷன் சென்னைச் சிறைச்சாலைக் கொடுமைகள் பற்றி விசாரணை நடத்தி. தனது பரிந்துரைகளை வழங்கியது என்ற செய்தியே இப்போது பலருக்கு நினைவிருக்காது!

அவசரநிலை காலத்தில் சென்னை சிறையில் அடைத்து வைக்கப்பட்ட தலைவர்களை எல்லாம் மிருகத்தனமாகத் தாக்கிய சிறை அதிகாரிகள் பற்றி இஸ்மாயில் கமிஷன் தந்த பரிந்துரை இன்று எந்த மூலையில் போடப் பட்டுக் கிடக்கிறதோ தெரியவில்லை!

நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கை தமிழ் நாட்டில் வலுத்து இருந்த போது, சிலரை சஸ்பெண்ட் செய்கிறோம் என்று பல மாதங்களுக்கு முன்பு அரசு சார்பில் ஒரு அறிவிப்பு வந்தது. அவ்வளவுதான்! மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுத்ததாக இதுவரை தகவல் இல்லை!

விசாரணைக் கமிஷன் அறிக்கையை ஏற்று, போலீஸ் அதிகாரிகள் மீது வழக்குப் போட்டு கைது செய்து நடவடிக்கை எடுக்கிறது கேரள அரசு! தமிழ்நாட்டிலோ கமிஷன் அறிக்கையை வெளியிடுவதில் பலமாத கால தாமதம் செய்து, பிறகு வேறு வழியின்றி அறிக்கையை வெளியிட்டு, அதற்குப் பிறகு பல மாதங்கள் நடவடிக்கை எதுவுமின்றி மவுனம் சாதித்து, அதற்குப் பிறகு 'சஸ்பெண்ட்' என்று அறிவித்து, அத்தோடு பிரச்னையை கிடப்பில்போட்டு விட்டது தமிழ் நாடு அரசு!

—'விடுதலை'

சென்னை 23—1—79 இதழ்

★★★★0★★★

மண்ணின் மைந்தர்கள் வாழ்வுடன விளையாட்டு?

அறிவியலின் வியத்தகு முன்னேற்றம் அகிலத்து மாந்தரை அருகருகே கொண்டு வந்து விட்டது. சோதனைக் குழாய்க் குழந்தை பிறப்பிக்கும் அளவுக்கு அதன் பரிணமம் முதிர்ந்து விட்டது.

ஆலயமணி ஓசையை ஆலைச் சங்குகளின் பேரொலி விழுங்கி விட்டது. பகுத்தறிவின் பக்கம் காற்று திசை திரும்பி விட்டது

எதற்கும், ஏன்? எப்படி? எதனல்? என்று கேள்விக்கணை தொடுக்கக் கற்றுக் கொண்டு விட்டான் மனிதன்.

இந்த இருபதாம் நூற்ருண்டில் —

மாறி வரும் புறச் சூழலை மதிக்க மறுப்பவன், இயற்கையின் தாக்குதலுக்கு இரை. கடந்த கால நிலையில் மஞ்சள் குளிப்பவன், கேலிக் குரிய மையப் பொருள்!

சமுதாயத்தின் ஒரு பிரிவில் ஏற்படக் கூடிய மாறுதல் அதன் அடுத்தடுத்த அங்கங்களில் பாதித்தே தீரும். அது விதி மட்டுமல்ல, காலத்தின் கட்டாயம்.

ஆக, அறிவியல்மட்டுமல்ல; ஆட்சியியலிலும் காலத்திற்கேற்ப நடந்து கொள்வது நாகரிகம்,

ஒரு கட்டுக்குள் அடங்கிக் கிடக்கும் ஒட்டு மொத்தச் சமுதாயத்துள், ஒருவன் மனத்தில் பொறி பிறக்கும் உணர்வு ஆதிக்கப் போக்குக்கு எதிரான எழுச்சி, ஏற்ற காலமும் ஏற்றுக் கொள்ளும் பக்குவப்பட்ட நெஞ்சங்களும் ஒன்றும் போது, காட்டுத் தீயாகிறது. உடனே சட்டங்களும் சம்பிரதாயங்களும் மறு பரிசிலனைக்கு ஆளாக வேண்டிய முயற்சி துவங்குகின்றது.

நியாய உணர்வு மிக்க நெஞ்சங்களில் அவை பூவிதழின் வருடலை உருவாக்குகின்றன.

ஆட்சியாளர்கள் உணர்வை மதிக்கத் தவறும் போது, அந்த இதமான வருடல்களே பெரும் மாறுதலுக்குப் பின்புறமாக அமைந்து விடுகின்றன.

சில நூறு பேர்களைக் கொண்ட சின்னஞ் சிறு நாடுகள் 'உயிர்—குருதி' என விலை கொடுத்து விடுதலை பெறுவது மொழி இனப் பாதுகாப்பு என்ற அடிப்படையை மனத்தில் கொண்டுதான். வேறு காரணங்கள் பல இருப்பினும் மைய இழை மொழி இனம் தவிர்த்த வேறில்லை.

சின்னஞ் சிறு பகுதிகள் மட்டுமல்ல; பரந்து விரிந்த பல்லாயிரம் சதுர மைல் உள்ளடங்கிய பொதுவுடைமை மண்ணிலே கூட எச்சரிக்கை உணர்வோடு தான் அமைப்பு முறை வகுக்கப்பட்டுள்ளது.

சிவப்பு மலர்கள் சிரிக்கும் பொதுவுடைமைப் பூங்காவில் கூட வகைகள் வேருக இருக்கும் பகுதிகளில் பாதுகாப்பும் வளர்ச்சிக்கான வாய்ப்பும் சமமாக உள்ளவாறு பார்த்துக் கொள்ளப்படுகின்றது. வண்ணம் ஒன்று எனினும் வகை வேறு என்பது உணரப்பட்டு; இருவகைக்குள் மோதல்கள் உராய்வுகள் தவிர்க்கப்படும் சூழல் உருவாக்கப்படுகின்றது. ஏழை பணக்கார வர்க்கத்துக்குள் இல்லை ஒரு சரிக்கட்டல்' என்று கூறும் பூமியில் தான் இது.

இனத்தால், மொழியால் ஒரு சமுதாய அமைப்புக்குள் ஒருவன் மற்றவனை விடவும் உயர்வு பெறுகின்ற நிலைமை

★★★★★★ ★★★★★

அருண சண்முகம்

★★★★★★★★★★

உருவாக்கப்பட்டால் அது அதிகக் காலம் நிலைக்காது — நீடிக்காது — என்பதற்கான சான்றுகளே இவை.

ஆனல் இங்கே இந்தியத் துணைக் கண்டத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திய: நடத்துகிற அரசினர் — இவைகளைப் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். அல்லது புரிந்து கொண்டும் மறைக்கின்றனர்.

மெத்தப் படித்தவர்கள் என ஊருக்கு வெளிச்சம் போடப்பட்டு உள்ள அவர்கள் —

மென்மையான உணர்வு படைத்தவர்கள் என மேன்மையாகப் பேசப்படும் அவர்கள் —

சொல்லிலும் செயல் திறத்திலும் — தியாகத்திலும் ஒப்பாரும் மிக்காருமில்லை எனப் புகழப்படும் அவர்களுக்கு —

'சமத்துவம்' பேசும்போது உறுத்துகின்றதே......

'சகோதரத்துவம்' பேசும் போது சிரிக்கத் தோன்றுகிறதே... ஏன்?

இனத்தால் நான் அடிமைப்பட மாட்டேன் என்றல் அது "குறுகிய நோக்கம்" என்று குறை கூறல்.

மொழியால் நான் இரண்டாந்தரக் குடிமகன் ஆகமாட்டேன் என்றல் ,மொழி வெறியன்" என்று பட்டம்.

மொழி, இனம், கலை, பண்பாடு பற்றிப் பேசி வரும் திராவிடர் இயக்கத்தவரே தாக்குதலைத் தாங்கித் தாங்கி மரத்துப் போகும் அளவுக்கு அதிகார வர்க்கம் செயலாற்றி வந்துள்ளது.

நீ தமிழன் என்று சொல்லி உணர்வூட்ட ஐயாவும் அண்ணவும் அவர் தம் தம்பியரும் இந்த நாட்டுக்குத் தேவைப் பட்டுள்ளனர்.

எந்த மண்ணுக்கும் இல்லாத தனித்துவம் இதுவென அழத்தான் வேண்டும்.

எந்த நாட்டு வரலாற்றில் பார்த்திருக்கிறோம் இத்தகு அவலத்தை... இன உணர்வூட்டுவதற்குள் அவர்கள் கல்லடியும் சொல்லடியும் தாங்கி. அப்பால் —

ஆட்சி மொழி என்ற வரிசையில் இந்திக்குத் தனிச் சிறப்பு என்றதும் — மொழி ஆதிக்கத்துக்கு எதிராகக் கொடி பிடிக்கத் துவங்கினர்.

அன்று உயர்ந்த கொடி இன்னும் இறக்கப்படாமலே இருக்கின்றது. இடைக்காலத்திலே கழகம் சந்தித்த சோதனைகள் பலவற்றிற்கும் இது ஒரு முக்கியக் காரணமாகும்.

இன்றைக்கும் இந்தி எதிர்ப்பு நீறு பூத்த நெருப்பாக நிலைக்கின்றது என்றல் அதற்காக ஐயாவும் — அண்ணவும், அஞ்சுக மைந்தனும் இந்த மண்ணில் உருவாக்கி வைத்துள்ள உணர்வுதான் படை.

இரண்டு தலைமுறைக்கு மேலாக உரிமைக் குரல் கொடுத்தும் ஒரு முடிவுக்கு வரத் தயங்குகின்றனர் மைய அரசினர். மக்கள் மன்றத்தின் முன்னல் சொல்லிப் பார்த்து —

சட்ட மன்றங்களில் வாதத்தை நிலைநிறுத்தி —

அறவழிப் போராட்டங்கள் நடத்தி —

அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்டு — அப்புறமும்சொன்னது தி, மு. கழகம் ... நீதி வேண்டும் என்று.

இன்னும் ஒரு முடிவு இல்லை.

வெந்த புண்ணிலே வேலைச் சொருகுவதுபோல் அவ்வப்போது இந்திக்கு ஆதரவான நடவடிக்கைகட்கு மட்டும் குறைவில்லை.

கொஞ்சமாவது சிந்தித்துப் பார்த்தார்களா — எத்தனை பிணங்கள் வீழ்ந்தன. 1965-ல் துப்பாக்கிக் குண்டுக்கு இரையானேர் தவிர தன்னைத் தானே மாய்த்துக் கொண்டனரே அந்த உணர்வைப் புரிந்துகொள்ள முடியாத நிலைக்குள் நிறுத்தி வைப்பது எது?

பஞ்சையாய் பராரியாய் ஏனேதானேவாய் எடுப்பார்க் கைப்பிள்ளையாய் மலைச்சாதியினர் போல் நாங்கள் வாழ்வது நியாயமா என்று கேட்டுச்சலித்தார் அண்ண.

வேம்பு கூடக் கசப்பை வெளிப்படுத்தும்போது தமிழன் உரிமை கேட்பது தவரு என நயமாகக் கேட்டார் கலைஞர்.

பதில் சொல்ல வேண்டியவர்கள் அமைதி காத்ததும் — அரசியல் சட்டமே எரிக்கப் படவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள் அவர்கள்.

கழகம் களம் அமைத்ததும் கழகத்தவரைப்பிடித்துச்சிறை வைத்தது காங்கிரஸ் அரசு. உயிர்ப் பிரச்சினையில் — மானப் பிரச்சினையில் — உரிமைப் பிரச்சினையில் குறுக்கிடும் எதுவும் தேவையற்றது என்பதை உணரவில்லை அவர்கள்.

பாலையில் பால் வார்த்தது போல் பண்டிதர் தந்த வாக்குறுதியும் - காற்றிலே பறந்த நூலறுந்த பட்டமாகிவிட்ட நிலையில் — எதை நம்பி வாழ்வது?

உணராத அவர்களை உதறி எறிந்தது மக்கள் மன்றம். 1967-ல் ஆதிக்கமனப்போக்குக்குக் கிடைத்த மாண அடி. அண்ண ஆட்சியிலமர்ந்ததும் இருமொழித் திட்டம் மூலம் இதற்கொரு முடிவு கண்டார்.

ஆனல் மைய அரசின் தாராள மனப்போக்கால் மறைமுகமாக வளமை பெறுகின்றது இந்தி இது இந்த மண்ணின் உணர்வுக்கு எதிரான போர். இந்த மண்ணின் மைந்தர்களின் வாழ்வுடனன விளையாட்டு.

கலைஞர் சொன்னதுபோல் இதுவரை 'இந்தித் திணிப்பு கூடாதது' என்ற வாதம் போய் 'இனி இந்தியே கூடாதது' என்ற குரல் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டியது மைய அரசின் கடமை:

காலத்தை உணர்ந்து நடப்பது நாகரிகம்! —

நடந்து கொள்ளுமா? மைய அரசு!!

சுதந்திர நாள் வரவேற்பை

ரத்துசெய்த கவர்னர்!

சுதந்திர நாளன்றுவழக்கமாக 'இராஜபவனத்தில்' நடைபெறும் வரவேற்பு விழா ரத்து செய்யப்பட்டு விட்டதாக மேற்கு வங்க மாநில கவர்னர் பத்மஜா நாயுடு அறிவித்திருக்கிருர்.

பி. சோ. தலைவர் கோஷுக்கு அவர் எழுதிய கடிதம் ஒன்றில் இந்த முடிவைத் தெரிவித்துள்ளார்

"அசாமிலிருந்து இன்னும் வங்காளி அகதிகள் வந்து கொண்டிருக்கும் நிலை இருப்பதால், நானும், முதல்வர் டாக்டர் பி சி, ராயும் இது பற்றி விவாதித்து சுதந்திர நாள் வரவேற்பு விழாவினை ரத்து செய்து விடுவதென முடிவு செய்திருக்கிறோம்"

இவ்வாறு அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

—11—8—60 நாளிதழ்களில் வெளியான செய்தி

புரியாது புலம்பும் 'பிளிட்ஸ்'!

யாருக்கும் அஞ்சாது திடுக்கிடும் செய்திகளைத் துணிச்சலாக வெளியிடும் பெருமை 'பிளிட்ஸ்' என்ற ஆங்கில வார இதழுக்கு ஒருகாலத்தில் இருந்தது - ஆம், ஒரு காலத்தில்!

'இண்டியாஸ்கிரேட்டஸ்ட் வீக்லி' என்று பறைசாற்றிக் கொள்ளும் 'பிளிட்ஸ்' தன்னுடைய 'மாபெரும் பெருமையை இழந்து 'மஞ்சள் பத்திரிகை' பாணியில் எழுதத் துவங்கிவிட்டது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு —

20-1-79 இதழில் அதில் வெளிவந்திருக்கும் ஓர் கட்டுரை

கட்டுரையின் தலைப்பு: DMK To LAUNCH ANTI — HINDI STIR ON R-DAY.

"இந்தித் திணிப்பின் மீது தனக்குள்ள எதிர்ப்பைக் காட்ட குடியரசு நாளை தி மு. கழகம்தேர்ந்தெடுத்திருப்பதானது, சட்டம்-அமைதியை சீர்குலைத்து எம் ஜி. ஆர். அமைச்சரவையைக்கவிழ்ப்பதற்கான ஓர் ஒத்திகையே' என 'பிளிட்ஸ்' அலறுகிறது.

எம். ஜி. ஆரின் அமைச்சரவையே கூறத் துணியாத - அப்படிக் கூறுவதற்குஇயலாத —ஒன்றை 'பிளிட்ஸ்' கூறியிருப்பதன் பின்னணி நமக்குப் புரியவில்லை

நேருவின் வாக்குறுதிப்படி ஆங்கிலம் தொடர்ந்து நிர்வாக மொழியாகவும்இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும் என்று எம். ஜி. ஆரின் அமைச்சரவை தெளிவுபடுத்திவிட்டதால் தி. மு. கழகத்தின் இந்தப் போராட்டம் வந்தையானது' என 'பிளிட்ஸ்' கேலி பேசுகிறது.

நேருவின் வாக்குறுதிக்கு சட்டவடிவம் கொடுக்கவும், வாக்குறுதியை மீறிய இந்தித் திணிப்பை எதிர்த்தும் எம் ஜி. ஆரின் அமைச்சரவை எடுத்த நடவடிக்கைகளை விரல்விட்டு எண்ணபிளிட்ஸால்முடியுமா? முடியாது

எம். ஜி. ஆரின் இந்தி எதிர்ப்பு மனப்பூர்வமானதல்ல என்பதையும் இந்தி மொழி ஆதிக்கத்தை உறுதியாக எதிர்த்துவரும் தி. மு கழகத்திற்கு மட்டுமே அது சாத்தியம் என்டதையும் விவரம் தெரிந்தவர்களிடமிருந்தாவது பிளிட்ஸ்' அறிந்துகொள்ளட்டும்!

அகில இந்திய அரசியலை மட்டுமல்லாது உலக விவகாரங்களையெல்லாம் அலசும் 'பிளிட்ஸ்' 'We Are for Hindi' என்று அ.தி.மு. க,வின் தூண்களில் ஒருவரான மனோகரன் நாடாளுமன்றத்தில் முழங்கியதை மறந்து விட்டதா? அல்லது மறந்து விட்டதுபோல் பாவனை காட்டி தமிழர்களை அல்லாதவரின் கண்களில்மண்ணைத் தூவப் பார்க்கிறதா?

'மறைந்த அண்ணாவின் வழி நடந்து ஞானப்பிரகாசச் சுடர் விடும் எம். ஜி. ஆரின் அமைச்சரவையினர்தான் -உண்மையான தி. மு. க.வினர்'' என உளறிக் கொட்டும் பிளிட்சுக்குத் தெரியுமா

அண்ணாவின் உயிர் மூச்சுக் கொள்கைகளையெல்லாம் ஆழக்குழிதோண்டிப்புதைத்துவிட்டு அதன்மீது அமைக்கப்பட்ட மண்மேட்டிலிருந்து கொண்டுதான் எம். ஜி. ஆரின் அமைச்சரவை ஆட்சி நடத்துகிறது என்பது!

"மாநில சுயாட்சி என்பது அண்ணாவின் கொள்கையல்ல' என்று கூறிய எம். ஜி. ஆரைப் போன்ற ஒரு அரசியல் மோசடிக்காரரின் ஊது குழலாக இன்றுமாறியிருக்கும் பிளிட்ஸ்' இன்னும் கூறுகிறது:

"தி. மு. கழகத்தின் தலைவரான கருணாநிதி ஏழாண்டுகள் முதலமைச்சராக இருந்த போது இந்தித் திணிப்பை எதிர்த்துப்போராடியதில்லை'' என்று

தமிழ்நாட்டிற்கு ஆட்சி மொழியாகத் தமிழும், இணைப்பு மொழியாக ஆங்கிலமும் இருந்தாலே போதும் என்றும்; இந்தி தேவையில்லை என்றும் சட்டமன்றத்தில் தி. மு. க. ஆட்சியின் போதுதான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 'அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும்' பிளிட்சுக்குத் தெரியாமல் போனதில் வியப்பில்லைதான்!

இந்தி அரக்கி இன்று தமிழக எல்லைக்குள் காலெடுத்து வைக்க மிரள்கிறாள் என்றால் அதற்குக் காரணமாயிருப்பவர் கலைஞரே ஆவார்.

கலைஞர்என்ற ஆதவன் முன்னே, கூலிக்கு மாரடிக்கும் குறுமதி எழுத்தாளர்களை 'சூ'காட்டி என்னதான் 'பிளிட்ஸ் குறைக்க வைத்தாலும் ஆதவனின் ஒளி மங்கிடாது; மறைத்திடாது!

என்றுமே ஆங்கிலம் என்பதுதான் தி மு. கழகத்தின் முழக்கம்' என்று கூறி நுனிப்புல் மேய்ந்திருக்கிறது பிளிட்ஸ்.

லெனின்

"இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்பதை ஏற்க மாட்டோம். இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பதினான்கு தேசிய மொழிகளும் மத்தியில் ஆட்சி மொழிகளாக ஆகும் வரை. தொடர்ந்து ஆங்கிலம் நிர்வாக. இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்' என்பதே தி மு. கழகம் முழங்கும் குறிக்கோளாகும். இதை ஒலிமாற்றி — உருமாற்றி— ஊரையே ஏமாற்றப் பார்க்கிறது பிளிட்ஸ்.

'இந்தி எதிர்ப்பு என்ற போர்வையில் பரவலான வன்முறைகளைத் தூண்டி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்க்க தி. மு. க. திட்டமிடுகிறது' எனக் குற்றம் சாட்டுகிறது பிளிட்ஸ்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளைக் கவிழ்க்கும் வித்தைகள் எல்லாம் தி மு. கழகம் அறியாதது

எந்த எம். ஜி ஆரை விழுந்து விழுந்து பிளிட்ஸ் ஆதரிக்கிறதோ அந்த எம்.ஜி. ஆருக்குத்தான் தி. மு. கழக அரசைக் கவிழ்த்த நாடகத்தில் பெரும் பங்கு உண்டு!

எம். ஜி. ஆரைத் தொடர்ந்து ஆளச் செய்து அவர் ஆளுகின்ற இலட்சணத்தை மக்கள் உணர வேண்டும் என்பதே தி. மு. க வின் நோக்கம். முட்செடியில் திராட்சை கனிகள் விளையாது என்பதை மக்களே அனுபவபூர்வமாக அறிய வேண்டாமா?

தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்பைக் களங்கப் படுத்தியதோடு நில்லாமல் முருகையனின்படுகொலைக்கு காரணம் தனிப்பட்ட நிலத் தகராறுதான் என்றும் தீர்ப்பு வழங்கிவிட்டது பிளிட்ஸ்!

இந்தியக் கம்யூனிஸ் கட்சி கூட ஆளும் கட்சியைக் குற்றம் சாட்டவில்லையாம்... அந்தப் படுகொலைக்குக் காரணம் அரசியல் நோக்கம் என்று கூறவில்லையாம்...

தி. மு க. மட்டுமே அரசியல் எதிரிகளைப் பழிவாங்கும் பேய்த்தனமான நடவடிக்கைகள் என்று எம் ஜி ஆர் அமைச்சரவையைக் குற்றம் சாட்டுகிறதாம....

பிளிட்ஸ் கூறுவது போல் முருகையன் படுகொலை செய்யப்பட்டதில் அரசியல் நோக்கம் இல்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுமானால் இந்த வழக்கை மத்தியப் புலனாய்வுத்துறையினர் விசாரிக்க வேண்டும் என்று எதற்காக தலைமை அமைச்சர் மொரார்ஜி தேசாயிடம் மனு கொடுத்திருக்க வேண்டும்?

"...கொலை செய்தவர் இதில் இவருக்குத் துணை நின்றவர்கள், இவரை ஊக்குவித்தவர்கள் பின்னணி உண்டு என அந்த வட்டார மக்களால் கூறப்படுகிறது.

...கொலையில் சம்மந்தப்பட்டவருக்கு ஒரு அரசியல் பின்னணியும் இருந்துள்ளது. அல்லது ஒரு அரசியல் பின்னணியை அவர்கள் முன் ஜாக்கிரதையாகவும் ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம்'

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழக மாநிலச் செயலாளரான திரு. ப. மாணிக்கம் கட்சியின் அதிகார பூர்வ வார ஏடான 'ஜன சக்தி'யில் [14-1-79] எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டு பிளிட்ஸ் முகத்தில் கரி பூசுகிறார்.

அதுமட்டுமல்ல—

அதே தேதிய 'ஜனசக்தி இதழில் 'கொலையாளி சந்திர போஸ், அ. இ. அ. தி. மு க. தான்' என்ற தலைப்பிட்டு தஞ்சை மாவட்டச் செயலாளரான திரு. பி. ராமலிங்கம் என்பவரின் அறிக்கையும் பெட்டிச் செய்தியாக வந்துள்ளது!

உண்மை இவ்வாறு இருக்க—

முருகையன் படுகொலைக்குக் காரணம் தனிப்பட்ட நிலத்தகராறுதான் என்றும் தி. மு. கழகம் தான் அரசியல் நோக்கம் கற்பிக்கிறதென்றும் கூறி 'முழுப் பூசணிக்காயை சோற்றில் அமுக்கப் பார்க்கிறது பிளிட்ஸ்.

புரட்சிகரமான கதைகள் பல எழுதிய சோசலிச சிந்தனையாளர் கே ஏ. அப்பாசின் கடைசி பக்க கட்டுரைகளைத் தாங்கிவரும் அதே பிளிட்ஸ்தான் அதே கடைசி பக்கத்தில் அழகிகளின் முக்கால் நிர்வாண படத்தையும் வாரம்தவறாமல் போடுகிறது — கவர்ச்சியைக் காட்டி காசு பறிக்கும் நோக்கோடு;

இன்று -

எம். ஜி ஆர் அமைச்சரவையைத் தோள் மீது தூக்கி வைத்து பிளிட்ஸ் ஆனந்தக் கூத்தாடுவது எந்த நோக்கத்திற்காக என்று புரியவில்லை!

(2ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குக் கருத்துகளும் கொண்ட உங்களை போன்றவர்கள், இந்தி வெறியர்களுக்குத்தந்துவரும். ஆதரவைவிலக்கிக் கொள்ளவும் எங்களின் கறுப்புக்கொடி ஊர்வலம் தூண்டுகோலாக அமையக் கூடும்.

இது குறித்து எனக்கு நீங்கள் கடிதம் எழுதியதற்காக மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் எங்களுடைய உணர்ச்சிகளைக் கவனிக்க டில்லியில் உண்மையான ஒரு தோழர் இருக்கிறார் என்பது எங்களுக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது.

அடுத்த முறை உங்களைச் சந்திக்கும் போது. இந்தப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசுகிறேன். நமது மக்களைப் பிளவு படுத்தும் இந்திப் பிரச்சினையில் நீங்கள் தலையிட்டு ஒரு திருப்திகரமான தீர்வு கண்டால் என்னைவிட மகிழ்ச்சி அடைபவர் வேறு யாரும் இருக்க முடியாது.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தி படிக்காமலே தேசத்துக்சாகத் தியாகங்கள் பலசெய்து செத்து மடித்தார்களே அவர்களெல்லாம் தேச பக்தர்கள் அல்லரா? செக்கிழுத்த சிதம்பரனாரும். திருப்பூர் குமரனும் அவர்கள் வழி வந்த தமிழர்களும் தேசபக்தர்கள் அல்லரா?

தென்னாட்டில் காங்கிரசுக் கட்சியை வேரூன்றச் செய்த முப்பெரும் தலைவர்களான தந்தை பெரியார் தமிழ்த் தென்றல் திரு. வி க டாக்டர் வரதராசலு நாயுடு ஆகியோர் இந்தி படிக்க வில்லையே— அவர்களெல்லாம் இந்தித் திணிப்பை எதிர்த்தவர்களாயிற்றே, அப்படியானால் அவர்களும் தேச பக்தர்கள் அல்லரா?

மூதறிஞர் இராஜாஜியே தமது இறுதி மூச்சு வரை இந்தித் திணிப்பை எதிர்த்தாரே அவர்கூட தேச பக்தர் இல்லையா?

இன்றைக்குத் தமிழ்நாட்டில் தேசியவாதிகள் என்று கூறிக்கொள்ளும் காங்கிரசுக்காரர்களும் ஜனதா கட்சியினரும், ஏனைய கட்சிக்காரர்களும் இந்தி படித்துக் கொண்டா இருக்கிறார்கள்? அவர்களும் தேச பக்தர்கள் இல்லையா?

இன்றைக்குத் குடியரசுத் தலைவராகஇருக்கின்ற சஞ்சிவ ரெட்டிக்கே இந்திதெரியாதே! அவருக்குக்கூட தேசபக்தி இல்லையென்று கூறுகிறாரா மொரார்ஜி?

ஒருவருடைய 'தேசபக்தி' யைக் கண்டறிவதற்குரிய அளவுகோல் இந்திதானா?

இதற்கும் மொரார்ஜி அல்லது அவருக்கு நன்றி தெரிவித்துத் தந்தி கொடுத்த எம் ஜி. ஆர். பதில்சொல்லியாக வேண்டும்.

தேசபக்தி என்றால் என்ன? தமிழில் நாட்டுப்பற்று என்பதைத்தான் தேசபக்தி' என்று வடமொழியில் கூறுகிறார்கள். தனித்தமிழில் எழுதுவது. பேசுவதெல்லாம் கூட 'தேசிய விரோதம்' என்ற மனப்பான்மை கொண்டவர்கள்தாம் 'தேசபக்தி' என்கிறார்கள். தமிழுணர்வு கொண்டவர்களெல்லாம்நாட்டுப்பற்று என்றுதான் சொல்லுவார்கள்.

நாட்டுப் பற்று நமக்கு இருப்பதால்தான் இந்தி கூடாது என்கிறோம். இந்தியைத் திணித்தால் நாடு சிதறுண்டு போய் விடுமே என்ற கவலையால்தான் இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம்.

நாட்டைப்பற்றிக் கவலை இல்லை எப்படியாவது இந்தி மொழி இந்தியாவின் ஆட்சி மொழியானால்போதும் என்று மொரார்ஜி தேசாயும் ஏனைய வடக்கத்தித் தலைவர்களும். அவர்களுக்கு இங்கு வால் பிடிப்பவர்களும் கருதுவார்களேயானால் இந்தியை அவர்கள் திணிக்கட்டும்; அதற்கு இங்குள்ள 'விசுவாசிகள் நடைபாவாடை விரிக்கட்டும் நமக்குக் கவலை இல்லை.

தாய்மொழிப் பற்றைக் குழி தோண்டிப் புதைத்து விட வேண்டும்; தமிழினம், தமிழ்நாடு என்றெல்லாம் பேசவே கூடாது; இந்தி—இந்தியா இந்த இரண்டும் தான் தேச பக்திக்கு அடையாளங்கள் என்று கூறுவார்களானால் நாம் அவர்களுக்குக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

தாய்மொழியை மிஞ்சிய. ஒரு தேசிய உணர்வு வளர முடியாது. அப்படி உருவாக்கப்படுகிற தேசியமும் உருப்படாது. ஏக இந்தியா இந்திய ஒருமைப்பாடு என்பதெல்லாம் வெறும் சொல்லளவில் தான் நிற்கும் என்பதை வடக்கே உள்ளவர்கள் உணரும் காலம் வந்தாக வேண்டும்;

★

நன்றித் தந்தி அனுப்பியவர்

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

திடீரென்று ஒரு நாள், தமிழ்நாட்டு நாளிதழ்களிளெல்லாம் ஒரு செய்தி கொட்டை எழுத்துக்களில் வெளிவந்தது!

'பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தந்தி' என்பதுதான் அது!

என்ன அப்படி அவசர அவசரமாகத் தந்தி கொடுக்கக் கூடிய வகையில் எழுந்துவிட்ட பிரச்சினை?

டெல்லியிலிருந்து தலைமை அமைச்சர் மொரார்ஜிதேசாய் தென்னாட்டுக்கு வந்தார். முதலில் கேரளத்துக்குச் சென்றுவிட்டுப் பின்னர் தமிழகத்துக்கு வந்தார். தமிழகத்துக்கு வரப்போகிறார் என்பதும் எம். ஜி. ஆருக்குத் தெரியும். இருந்தும் திருவனந்தபுரத்தில் இருந்த மொரார்ஜிதேசாய்க்கு அவசர அவசரமாகத் தந்தியொன்றை அனுப்பிவைத்தார் தமிழக முதலமைச்சர்!

அவ்வளவு அவசரமும் அவசியமுமான பிரச்சினை என்ன? அடுத்துத் தமிழகம் வரவிருக்கும் தலைமையமைச்சரை நேரில் சந்திக்கும்போது சொல்ல வேண்டியதை அவரிடம் சொல்லக் கூடாதா? அதற்குள் அவசரத் தந்தி ஏன்?

இதையெல்லாம் யாரும் கேட்கக்கூடாது—இதில்தான் 'மர்ம'மே அடங்கியிருக்கிறது! நம்முடைய முதலமைச்சர் நினைத்தால் நினைத்ததுதான்—சொன்னால் சொன்னதுதான். ஏன்?, எதற்கு?, எப்படி? என்ற பகுத்தறிவு வினாக்களெல்லாம் அவரிடம் பலிக்காது!

அது இருக்கட்டும்; அந்த அவசரத் தந்தியைப் பற்றிக் கவனிப்போம்.

திருவனந்தபுரத்தில் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் இதுவரை எந்தத் தலைமையமைச்சரும் சொல்லாதவோர் அரியசெய்தியை—இதுவரை யாரும் கேட்டறியாத ஒன்றை—திருவாய் மலர்ந்தாரல்லவா? அதற்காகத்தான் அவரைப் பாராட்டி — அதற்காக நன்றி தெரிவித்துத் தந்தியனுப்பினார் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன்!

'தென்னாட்டு மக்கள் மீது இந்தி திணிக்கப்படமாட்டாது. இந்தித் திணிப்பு என்ற பிரச்சினைக்கே இப்போது இடமில்லை'

என்பதுதான் தலைமையமைச்சர் மொரார்ஜிதேசாய் உதிர்த்த, வரலாற்றுச் சிறப்புமிக்க பொன் மொழிகள்.

இந்தப் பொன் மொழிகளுக்காகத்தான் தமிழ்நாட்டுப் பொன் மனச் செம்மல் நன்றி தெரிவித்துத் தந்தி கொடுத்திருக்கிறார்!

'இதிலே என்ன புதுமை இருக்கிறது? இதற்கு முன்பெல்லாம் இதனை வேறு யாருமே சொல்லவில்லையா? வடக்கேயிருந்து வருகிறவர்களெல்லாம் இதனைச் சொல்லிச் சொல்லி, அதனைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன ஒரு செய்திதானே இது? இதற்காகவா ஒரு நன்றித் தந்தி?' இப்படியெல்லாம் கேட்கக் கூடாது.

பண்டித நேருவின் உறுதி மொழி பற்றியோ, லால்பகதூர் சாஸ்திரியின் உறுதிமொழி பற்றியோ இப்பொழுது பேசக் கூடாது. அவர்களெல்லாம் மறைந்து விட்டவர்கள். சர்வாதிகாரி 'இந்திராவே கூட இந்த உறுதிமொழியைத் தந்தவர்தானே? என்று கேட்காதீர்கள். அந்த இந்திராவும் இப்பொழுது ஆட்சியில் இல்லை. இன்றைய நிலையில் ஆளும் மொரார்ஜியின் வாக்குதான் வேதவாக்கு என்று மதிப்பவர் எம். ஜி. ஆர்!

கண்டனத் தந்தி அனுப்பாததேன்?

அதனால்தான், "இந்திரா வாக்குறுதியை எப்படி மதித்தோமோ அதே போல மொரார்ஜியின் வாக்குறுதியையும் மதிக்கிறோம். எங்களுக்கு மொரார்ஜி மீது நம்பிக்கை இருக்கிறது"

என்று கூறியிருக்கிறார் எம் ஜி. ஆர்!

ஒரு காலத்தில் இந்திராவுக்கு 'விசுவாசமா'க நடந்துகொண்டவர் இப்போது மொரார்ஜிக்கு 'விசுவாசாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டாமா? அதற்காகத்தான் இந்தத் தந்தி!

யாரும் சொல்லாததை மொரார்ஜி சொல்லி விட்டார் என்பதற்காக அல்ல; இந்திராவிடம் கொண்டுள்ள விசுவாசத்தைப்போலவே மொரார்ஜியிடமும் கொண்டிருக்கிறோம் என்று எம். ஜி. ஆர். சொல்லாமல் சொல்லுவதுதான் இந்தத் தந்திக்குப் பொருள்

கோவையிலே கோலாகலமாக இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு—கூடிட வாரீர் என்று அழைப்பு விடுத்துவிட்டு — வண்ணச் சுவரொட்டிகளையும் அச்சடித்து ஒட்டிவிட்ட பிறகு —இல்லை இல்லை—அது இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடே அல்ல—வெறும் வீர வணக்க மாநாடுதான் என்று எவ்வளவு அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்!

நாலரைக்கோடி தமிழ் மக்களின் கண்களிலும்மிளகாய்ப்பொடியை அல்லவா தூவத் துணிந்திருக்கிறார் நாலரைக்கோடி தமிழ்மக்களின் காவலர்

மொரார்ஜி கூற்றுப்படி, இந்தித் திணிப்பு இல்லை — இந்தி திணிக்கப்படமாட்டாது என்று எம். ஜி. ஆர். நம்புகிறார் என்றால் கோவையிலே இந்தித் திணிப்பு மாநாடு ஏன்? என்று குறும்புக்காரப்பத்திரிகை நிருபர்கள் வேறு கேட்டுத் துளைத்திருக்கிறார்கள்.

அதற்கும் 'டக்'கென்று பதிலளித்திருக்கிறார் எம். ஜி. ஆர். கோவையிலே தங்கள் கட்சி நடத்துவது இந்தித்

"சேனு"

திணிப்பு மாநாடல்ல வீர வணக்க மாநாடுதான் என்று!

இந்தத் துணிச்சல் வேறு யாருக்கு வரும்?

அப்படியென்றால் இவரை மீறி இவர் கருத்துக்கு மாறாக இவரது கட்சியின் பத்திரிகை 'இந்தித் திணிப்பு எதிர்ப்பு மாநாடு' என்று விளம்பரம் செய்ததா? சுவரொட்டிகள் அச்சிடப்பட்டனவா?

இப்படியும் கேள்வி எழுப்பக்கூடாது. நடந்தவை 'நடந்தவைகளாகவே இருக்கட்டும்; நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும்' என்று அண்ணாவின் பொன்மொழிகளை உதிர்க்சுத் தொடங்கிவிடுவார் பொன் மனச் செம்மல்!

அதெல்லாம் சரி; இந்தித் திணிப்பு இருக்காது என்று கூறிடவுடன் மொரார்ஜி தேசாய்க்கு நன்றித் தந்தி அனுப்பிய எம். ஜி. ஆர்., அடுத்து அவர் தமிழ்நாட்டுக்கு வந்து கூறிய ஒரு கருத்துக்குக் கண்டனத்தந்தி அனுப்பியிருக்க வேண்டுமே! அப்படி அனுப்பினாரா எம். ஜி. ஆர்? இப்படிச் சிலர் கேட்கக் கூடும்.

என்ன அப்படி, கண்டிக்கத்தக்க கருத்தைக் கூறினார் மொரார்ஜி?

'தேச பக்தி' உள்ளவர்களெல்லாம் இந்தி படிப்பார்கள்—படிக்க வேண்டும். என்று கூறினாரே மொரார்ஜி, இதனை வரவேற்கிறாரா எம். ஜி. ஆர்?

அவர் வரவேற்கிறார் என்றால் அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஏனென்றால், தானும் தேசிய பரம்பரையில் வந்ததாகக் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டவர்தான் எம். ஜி ஆர்!

எம். ஜி. ஆர். தமது தேச பக்தியை வெளிப்படுத்திக் கொள்ள நாளை முதலே இந்தி படிக்கத் தொடங்கட்டும். அதையும் நாம் ஆட்சேபிக்கத் தேவையில்லை!

ஆனால் இந்தி படிக்காதவர்களெல்லாம் தேச பக்தி இல்லாதவர்களா?

இதற்கு மட்டும் மொரார்ஜியோ அல்லது அவர் சார்பில் எம். ஜி. ஆரோ பதில் சொல்லித்தானாக வேண்டும்.

இந்தி படிப்பவன்தான் தேச பக்தி உள்ளவன் என்றால்

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

அன்றே அண்ணா கேட்ட கேள்வி!

நாட்டு மக்களே — உங்களைக் கேட்கிறேன்; நல்லறிவாளர்களே உங்களைக் கேட்கிறேன்; இதற்கு என்ன பதில் தரப்போகிறீர்கள். இன்னும் சில ஆண்டுகளிலே— 1965-ல் பூதம் படையெடுப்பதுபோல இந்தி எனும் பூதம் தமிழ்நாட்டில் புகுந்து, மூடிய கதவைத்தட்டி, மூடியகண்களைத் திறந்து, 'என்னைப்பார்; நான் பிறந்து முந்நூறு ஆண்டுகள்தான் ஆயிற்று; ஆனால் உன்னுடைய தமிழ் பிறந்து பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. என்னிடத்திலே இலக்கணம் இல்லை; இலக்கியமில்லை; ஆனால் உன்னுடைய தமிழில் இலக்கணம் இருக்கிறது; இலக்கியம் இருக்கிறது. ஆயினும் நான்தான் ஆளுவேன்' — என்று ஆணவத்தோடு நம்மைப் பார்த்துக் கேட்கப் போகிறது. அதை எதிர்க்க, அந்த ஆணவத்தை அழித்தொழிக்க என்ன பதிலைத்தரப்போகிறீர்கள் என்று கேட்டுப் போகத்தான் இந்தத் தில்லைக்கு நான் வந்தேன்.

— பேரறிஞர் அண்ணா
(சிதம்பரம் கூட்டத்தில் 27—6—60)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்—600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. [illegible] 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை—600018
தொலைபேசி: 441009